Registered as a Newspaper

PHYSICS
89 புலங்கள் செவ்வி 3-4
ஒலி (Sounds) செ. வி. 4-5
90 - ஒளியியல் சனி. ஞா. 9—10
திரு. சௌந்தி B. Sc. (Hons)
NIRU TUITION CENTRE
Kondavil.

# உதயன்

விலை ரூ. 2.50

BOTANY
Batch—II
90 - உருவவியல்
சனி- ஞா 2. 30 p. m
திரு: பாலா
90 ZOOLOGY
இழையவியல்
சனி - ஞா - 4. 30
திரு: ஈசன்
Niru Tuition Centre
Kondavil

சுடர்: 4 விபவ ஹூ மார்கழி மீ 19 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 409 ஜ அவ்வல் பிறை 24 (03-01-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர் 35

# எமது பிரச்சினைகளை நாமே பேசி தீர்ப்போம்

## புதிய ஜனாதிபதி பிரேமா நாட்டு மக்களுக்கு அழைப்பு



பிரேமதாசா

கண்டி, ஜனவரி 3

எமது பிரச்சினைகளை நாமே பேசித் தீர்ப்போம். எமக்குள்ளே நிலவும் சச்சரவுகளையும், பிணக்குகளையும், பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தை, கருத்து உடன்பாடு, இணக்கம் ஆகியனவகள் மூலம் நாமே தீர்த்துக்கொள்வோம்.

புதிய ஜனாதிபதியாக நேற்றுப் பதவியேற்ற திரு. ரணசிங்க பிரேமதாசா பதவியேற்பு வைபவத்தின் பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின்போது இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

புதிய ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

★ பொதுமக்களின் நல்வாழ்வுக்காக நாம் அனைவரும் அறிவுத் திறமைக்கும் சத்தியத்துக்கும் ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்கும் எம்மை அர்ப்பணித்துக்கொள்வோமாக!

★ ஒழுக்கம் புகழ்ந்து போற்றபடவும் ஏற்ற தோர் சூழலை எனது அரசு ஏற்படுத்தும்.

★ பாடுபட்டு உழைத்தல் மூலம் பயனை அனுபவிக்க முடியும்: தகுதி உடையவர்கள் மட்டுமே பதவி, மரியாதை பெற முடியும்.

★ மனிதாபிமான எண்ணத்தை முன் வைத்து சேவை புரியும் அரசு ஒன்று வந்திருக்கிறது என்று மக்கள் கருதும் நிலை வந்தால் தான் அவர்களுக்கு அரசின் மீது உண்மையான ஈடுபாடு ஏற்படும்.

★ முழு நிறைவான ஜனநாயகத்தை வெற்றியடையச் செய்வதற்கு நிர்வாகம் பன்முகப் படுத்தப்படல்வேண்டும்.

★ ஜனநாயகம் இனிது தலைதூக்க வலிமை மிகக அரசும் ஊக்கச் சக்தி மிகுந்த எதிர்க்கட்சியும் தேவை.

★ நான் யாவரினதும் ஆக்கபூர்வமான விமர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### புதிய ஜனாதிபதியின் தமிழ்ப் பேச்சு!

கண்டி, ஜன 3

கண்டி, தலதா மாளிகை எண்கோண மண்டபத்திலிருந்து ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

முதலில் அவர் சிங்களத்தில் உரையாற்றினார். அதன் பின்னர் தமிழில் சில நிமிட நேரம் பேசினார்

தமிழில் அவர் சொன்னதை அப்படியே இங்கு தருகிறோம்:

நான் ஜனாதிபதிப் பதவியைப் பாரம் எடுத்தேன். அதாவது இலங்கையின் எல்லா மக்களதும் நலத்தைப் பாரம் எடுத்தேன். உங்களுக்குத் தெரியும் சகோதர, சகோதரகளே! நான் ஐக்கிய தேசியக் கட்சியின் மூலம் வந்தேன்.

நீங்கள் எல்லோரும் எனக்கு ஆதரவு தந்தீர்கள். அதற்கு ரொம்ப நன்றி.

இனிமேல் நான் இந்த நாட்டு எல்லா மக்

(8ஆம் பக்கம் பார்க்க)

### நேற்காணி அன்பளிப்பு

கண்டி, ஜன, 3

புதிய ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்றுத் தலதா மாளிகைக்கு 25 ஏக்கர் நெற்காணியை அன்பளிப்புச் செய்தார்.

பதவி ஏற்ற பின்னர் அவர் மேற்கொண்ட முதலாவது உத்தியோக பூர்வ நடவடிக்கை இதுவேயாகும். (அ)

### நல்லூரில் துப்பாக்கிச் சூடு!

யாழ்ப்பாணம் ஜன 3

நேற்று நண்பகல் 2 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோவிலை அண்டிய பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது.

படையினரைக் கண்டு ஓடிய இளைஞர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

### பரந்தன் ஊழியர்களின் முயற்சியால்
## கிளிநொச்சி நகருக்கு மின்சார விநியோகம்

வட்டக்கச்சி, ஜன 3

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் இருக்கும் ஜெனரேட்டர் மூலம் கிளிநொச்சி நகருக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் மின் விநியோகம் மேற்கொள்ளப் படுகிறது.

கடந்த நான்கு வருட காலமாக இயங்காமல் இருந்த மேற்படி பாரிய ஜெனரேட்டரை மிகுந்த சிரமத்தின் மத்தியில் கூட்டுத்தாபன அதிகாரிகளும், ஊழியர்களும் முயற்சி எடுத்து இயங்க வைத்திருக்கின்றனர். இதனால் தற்போது மாலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை கிளிநொச்சி நகருக்கு மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது.

இரவு பத்து மணிக்கு மேல் மின்சாரத்தைப் பாவிப்பதற்குப் போதிய பாவனையாளர்கள் கிளிநொச்சியில் இல்லை என்றும் —

இதனால் அதற்கு மேலும் இரவில் தொடர்ந்து ஜெனரேட்டரை இயங்கவிட்டால் மின்சாரம் வீணாகும் என்றும் —

அதனாலேயே பத்து மணிக்கு மேல் விநியோகம் நிறுத்தப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. (உ-163)

## வட்டக்கச்சியில் ஞாயிறு நடந்த மோதல்!

வட்டக்கச்சி, ஜன 3

வட்டக்கச்சி தபால் பெட்டிச் சந்திக்கு அருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் மோதல் நிகழ்ந்தது.

இராமநாதபுரம் பகுதியில் தேடுதல் நடத்திவிட்டு வட்டக்கச்சி படை முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்த படையினர்மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரியவந்தது.

மோதலை அடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. (உ-163)

## யாழ்ப்பாணத்தில் ஐ.தே.க. போட்டியிடாது

கொழும்பு, ஜன 3

ஐக்கிய தேசியக் கட்சி யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடாது.

வன்னி, அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மாவட்டங்களில் மட்டுமே போட்டியிடும் என்று அறிவிக்கப்படுகிறது.

திருகோணமலையில் திரு. வி. ஆர். நவரத்தினராஜாவும், அம்பாறையில் திருமதி ரங்கநாயகி பத்மநாதனும், மட்டக்களப்பில் திரு. கே. டபிள்யூ தேவநாயகம், திரு. இ ஈஸ்வரன், திரு. கே. மாணிக்கம், திரு. எம். சிவனேசராஜா ஆகியோரும், வன்னியில் திருமதி ஆர். எம். புலேந்திரனும் போட்டியிடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## சர்வசன வாக்கெடுப்பு: அரசு மீளாய்வுசெய்யும்

கொழும்பு, ஜன 3

நிலைமையை அனுசரித்து இணைப்புப் பற்றிய சர்வசனவாக்கெடுப்புக்கான திகதியை மீளாய்வு செய்வதாக இலங்கை அரசு உறுதியளித்திருக்கிறது.

இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் இதனை நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இணைப்புப் பற்றிய வர்த்தமானி அறிவித்தல் பற்றிக் கேட்ட போது திரு. டிக்ஸிற் சொன்னதாவது;

மாகாணசபைச் சட்டத்தில் சர்வசன வாக்கெடுப்பு 1988 டிசம்பர் 31 இல் நடத்தப் படவேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

டிசம்பர் 27 இல் திரு ஜெயவர்த்தனவைச் சந்தித்தேன். சர்வசன வாக்கெடுப்பு திகதி நீடிக்கப்படும் என்று அப்போது அவர் என்னிடம் தெரிவித்தார். ஆனால்

(8 ம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தலில் ஜே.வி.பி. போட்டியிடும்?

கொழும்பு, ஜன 3

பெப்ரவரி பொதுத் தேர்தலில் போட்டியிடுவதா; இல்லையா என்பது குறித்து மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைப் பீட மட்டத்தில் தீவிர பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

முன்னணியுடன் நெருங்கிய வட்டாரங்களை ஆதாரங்காட்டி இச் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

ஆனால் அதற்கு முன்னரே வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்கான கால எல்லை முடிவடைந்து விடும்.

ஆகவே அவசரகாலச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுத் தலைமையை உருவாக்கும் ஈரோஸ் முயற்சி வெற்றிபெறவில்லை!

யாழ்ப்பாணம், ஜன.3

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஓர் கூட்டுத் தலைமைத்துவத்தை உருவாக்கும் நோக்கத்துடன் ஈரோஸ் நடத்திய பேச்சுவார்த்தைகள் எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை.

இதனை அடுத்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஈரோஸ் தனித்து சுயேச்சையாகப் போட்டியிடும் நிலையில் உள்ளது.

தமிழ்பேசும் மக்களின் குரல் ஏகோபித்து ஒலிக்கக்கூடியதாக ஓர் கூட்டுத் தலைமைத்துவத்தை உருவாக்கும் முயற்சியில் ஈரோஸ் பிரமுகர் திரு. பரா கடந்த சில நாட்களாக ஈடுபட்டிருந்தார்.

கொழும்பில் அரசியல் கட்சிகளுடனும் குழுக்களுடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்திவந்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் எதிர்பார்த்த பலனை அளிக்காமற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ஓர் அணி உருவாக்கும் முயற்சி:
## விட்டுக்கொடுப்பதற்கு ஈ. பி. ஆர். எல். எப். தயார்

— மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் —

மட்டக்களப்பு, ஜன 3

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் சகல தமிழ் அரசியல் அமைப்புகளும் ஒரே அணியில் போட்டியிடுவதற்காக நியாயபூர்வமான வகையில் விட்டுக்கொடுப்பதற்கு ஈ பி ஆர் எல் எவ் தயாராக இருக்கிறது.

வட-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு அ. வரதராஜப் பெருமாள் செய்தியாளரிடம் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்—


தமிழ் பேசும் மக்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

03. 01. 1989
மார்கழி 19
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
11.00முதல் 12 30வரை
ராகுகாலம்:
03.30முதல் 05.00வரை

### முச்சந்தி முரளி



அப்ப ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸுக்கு ஆனந்தம் போச்சு என்டு சொல்லுங்கோ...!

## திரளான மக்கள் கண்டியில் கூடினர்

கண்டி, ஜன 3

புதிய ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்ற வைபவம் நேற்றுக் காலை கோலாகலமாக இடம்பெற்றது.

கண்டி தலதா மாளிகையில் உள்ள சரித்திரப்பிரசித்திபெற்ற எண்கோண மண்டபத்தில் இந்த வைபவம் நடைபெற்றது. பெரும் திரளான மக்கள் அதில் கலந்து கொண்டனர்.

பதவியேற்பு வைபவத்துக்கு முன்னர் தலதா மாளிகையில் நடைபெற்ற புத்தபூசையிலும் வழிபாட்டிலும் ஜனாதிபதியும் குடும்பத்தினரும் மற்றும் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

சரியாக காலை 10:30 மணிக்கு, ஜனாதிபதியின் செயலாளர் திரு மெனிக்திவல, புதிய ஜனாதிபதியாகத் திரு. பிரேமதாச தெரிவு செய்யப்பட்டிருக்கும் அறிவிப்பை வாசித்தார்.

அதன்பின் திரு.பிரேமதாசவும், திருமதி ஹேமா பிரேமதாசவும் அவர்களது புத்திரர், புத்திரி ஆகியோரும் சங்கொலிக்கும், மங்கள பேரிகை முழக்கத்துக்கும் இடையே எண்கோண மண்டப மேடைக்கு வந்து சேர்ந்

(8ஆம் பக்கம் பார்க்க

### நீதி அமைச்சு பிரேமாவிடம்

கொழும்பு, ஜன, 3

பெப்ரவரி நாடாளுமன்றத் தேர்தல் முடிவடையும் வரை ஜனாதிபதி பிரேமதாசாவிடம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு இருக்கும் என்று தெரியவருகிறது. (உ-எ)

### சுன்னாகத்தில் இளைஞரின் சடலம்

யாழ்ப்பாணம், ஜன 3

சுன்னாகம் பஸ் நிலையத்தில் நேற்றுப் பகல் 12 மணியளவில் இளைஞர் ஒருவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் கிடக்கக் காணப்பட்டது (உ-10)

### விபத்தில் சாரதி பலி!

யாழ்ப்பாணம், ஜன 3

உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு கொழும்பிலிருந்து யாழ்நோக்கி வந்த லொறி ஒன்று கடந்த சனிக்கிழமையன்று மதவாச்சி 'தவசிமலை ஏற்றம்' என்ற இடத்தில் தடம்புரண்டு விபத்திற்குள்ளானது.

விபத்தில் லொறிச்சாரதியான வைரமுத்து தங்கராஜா மரணமானார்.

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உரிய பொருட்களை ஏற்றிக்கொண்டு வந்த லொறியே விபத்துக்குள்ளானது. (உ-5

### இரவுநேர ரயில் சேவை

யாழ்ப்பாணம் மட்டக்களப்புப் பகுதிகளுக்கு இரவுநேரத்தபால் ரயில் சேவையை ஆரம்பிப்பது குறித்து கூட்டுப்படைத் தலைமையகம் ஆலோசனை நடத்திவருகிறது. (ஒ-எ)

### அல்விஸ் அவுட்?

கொழும்பு, ஜன3

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் அமைச்சர்கள் ஆனந்த திஸ்ஸடி அல்விஸ், டி.பி.விஜயதுங்க, டபிள்யூ. ராஜகருணா ஆகியோரின் பெயர்கள் இடம்பெற மாட்டாது எனத் தெரியவருகிறது. (உ-எ)

## செய்திச் சாரம்

### மீண்டும் நிராகரிப்பு

புதுடில்லி, ஜன 3

இந்திரா காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட எதிரிகளில் ஒருவரான கேஹர் சிங்கின் கருணை மனுவை இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதி வெங்கடராமன் நேற்று நிராகரித்துவிட்டார். (உ-எ)

### நஷ்ட ஈடு வழங்கப்பட்டது

ஜனாதிபதித் தேர்தல் கடமையில் ஈடுபட்டு உயிர்நீத்தவடபிராந்திய போக்குவரத்துச் சபைச் சாரதி ந. விஷ்ணுசிங்கத்தின் குடும்பத்துக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்பட்டது.

நேற்று கோண்டாவில் சாலையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் சபைத்தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் இந்தத் தொகையை வழங்கினார். (உ-10)

### 300 கைதிகள் விடுதலை

முந்நூறு கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

புதிய ஜனாதிபதி பதவி ஏற்றதையொட்டி வெலிக்கடை, போகம்பலை மற்றும் சிறைகளில் ஆறு மாதங்களுக்குக்குறைந்த சிறைத்தண்டனை அனுபவித்து வந்தவர்களே விடுதலை செய்யப்பட்டனர். (ஒ-எ)

### நெல்லியடியில் மோதல

கரவெட்டி, ஜன 3

நெல்லியடி முருகையன் ஆலயத்திற்கு அருகில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை 5-45 மணியளவில் மோதல் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

மாற்று இயக்கங்களுக்கிடையே மோதல்நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-70)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 41 சிறீ தொடர் இலக்கம் கொண்ட 1983 ஆம் ஆண்டில் உற்பத்திசெய்த 3 85 K. W - E. L' F Truck 350 விற்பனைக்கு உண்டு. தொடர்பு; விஜயகர் டீசல்வேர்ஸ், 366/1 மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். (8549)

## தேவை

சிறந்த முறையில் மணிக்கூடு திருத்துபவர் தேவை. சாப்பாடு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும் உடன் தொடர்பு கொள்ளவும் தேவன் என்ரபிறைஸ்' தேணிக்கரை, அளவெட்டி. (8559)

### தாதிபயிலுனர்கள் தேவை

G C.E. O/L ஆங்கில சித்தியும் A/L இரண்டு பாடங்களும் விரும்பத்தக்கது. 5மைல் சுற்றுடலில் இருப்போருக்கு முன்னுரிமை. மகப்பேறு வும் பிணிதீர் மனையும் சங்கானை (8761)

## வகுப்புகள்

G S Q (Bio and Maths). Stenography HomeScience(Diploma) English G C. E (O/L) வகுப்புக்கள் 8-1 1989 ல் ஆரம்பமாக உள்ளன விபரங்களுக்கு: அதிபர், உயர்கல்விக் கல்லூரி (The College of Higher Studies) 73, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். (8539)

### பாடசாலை பஸ்சேவை

நீர்வேலியிலிருந்து யாழ் நகர்வரை சகல பாடசாலைகளுக்குமான பாடசாலை பஸ் சேவை ஜனவரி 05 இல் இருந்து ஆரம்பம் ஆசன வெற்றிடங்கள் உண்டு பெயர் பதிவுகள் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் இருபாலை. (C/1072)

### சேவை

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி. 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (Shabra-Samy & Co அருகாமையில்) (C/945)

### காணவில்லை

அ. ஜெயசீலன் ஆகிய எனது அடையாள அட்டை இல: 670561933V திருநெல்வேலிக்கும் கலட்டிக்கும் இடையில் காணாமல் போய்விட்டது கண்டெடுத்தோர் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். நன்றி அ. ஜெயசீலன் C/549

### வாடகைக்கு தேவை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. யாழ் நகரத்தை அல்லது நல்லூரை அண்மிய பகுதிகளில் விரும்பத்தக்கது Annex ஏற்றுக் கொள்ளப்படும். விபரங்களுடன் தொடர் 18 C/o Uthayan (8567)

### Accomodation

Available for Students (Boys) Board and Lodging with all facilities close to St John's College and other schools Miss M Kandiah 261/8 Colombuthurai Road Colombuthurai. Jaffna (8553)


## நாளை நெல்லியடியில்

# வல்வெட்டித்துறை வி.க கலட்டி வி.க மோதல்

ஹாட்லி கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியில் நாளை 4 ஆம் திகதிமாலை 4 00மணிக்கு வல்வெட்டித்துறை விளையாட்டுக் கழகமும் கலட்டி விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இப்போட்டி நடைபெறுகிறது

வைபவத்தில் பிரதம விருந்தினராக ஹாட்லி கல்லூரி அதிபர் திரு. பி. பாலசிங்கமும் கௌரவ விருந்தினர்களாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. ஜேய் சந்தவராஜா கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஈ ஐயாத்துரை ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

இறுதிப் போட்டியன் இம் மாதம் 14 ஆம் திகதி ஹாட்லி கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பருத்தித்துறை பாவட்ட உதைபந்தாட்ட லீக் இப் போட்டியை நடத்துகிறது (இ)

## நன்றியும் பாராட்டும்

நாகர்கோவில் கொத்தணி அமைப்பினுள் அமைந்த செம்பியன்பற்று அரசினர் தமிழ் வித்தியாலயத்தை மீண்டும் ஜி சி.ஈ சாதாரணதரப் பரீட்சை நிலையமாக அமைத்து உதவிய யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகத்துக்கு நாகர்கோவில் கொத்தணி மூலாதாரப் பாடசாலை அதிபர் திரு. க பரமகுரு நன்றி தெரிவித்துள்ளார்.

அதே சமயம் நாகர்கோவில் கொத்தணி அமைப்புக்கு உட்பட்ட பாடசாலைகளில் நிலவிய ஆசிரியர் பற்றாக்குறையை ஓரளவு நீக்கியதற்கு கொத்தணி அதிபர்கள் சபை கல்விப் பணிப்பாளருக்குப் பாராட்டுக்களை தெரிவித்துள்ளது (இ-118)

## ரூ 2,000 கோரி ஆர்ப்பாட்டம்

திருமலை நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு மீளகுடியமர்வு நிவாரணமான ரூபா 2000/- இது வரை வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது

இதனை ஆட்சேபித்து நகரசுத்தித் தொழிலாளர்கள் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர். (இ-150)

## மண்ணெண்ணெய் விலை

கோப்பாய், ஜன.3

யாழ் குடாநாட்டில் மண்ணெண்ணெய் விலை லீற்றர் 10.00 ரூபாவாக உள்ளபோதும் கோப்பாய் வடக்கில் உள்ள தனியார் கடைகளில் லீற்றர் 12.00 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது (இ-72


# I. A. B.

Foundation — 9 - 1989
Inter and Finals — 6- 1- 1989 — 6- 1- 1989

புதிய வார நாள் வகுப்புகள் ஆரம்பமாகின்றன:

## NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St Peters Lane
Hospital Road,
Jaffna

(C/1084)

# DIPLOMA IN NURSING
## (தாதிப் பயிற்சிகள் நெறி)

புதிய பயிற்சி நெறி ஆரம்பம்: 4 - 1 - 1989

- விசேட பார்மஸி ஆங்கில வகுப்புக்கள்
- பிரபல விரிவுரையாளர்கள்

உங்கள் பதிவுகளுக்கு:

## NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. PETERS LANE,
HOSPITAL ROAD,
JAFFNA.

(C/1082)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி சிவசம்பு [கனகம்மா]

தோற்றம்: 10-09-1928 — மறைவு: 04-12-1988

குடும்பத்தின் ஒளிவிளக்காய் மகிழ்வோடு வாழ்ந்து இடை நடுவில் எம்மை ஆறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டகன்ற எங்கள் அன்புத் தெய்வமே!

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

அன்புக் கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.


## - சாவகச்சேரியில் -

DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN

### BASIC LANGUAGE

(Create of Higher Education)

கல்வித் தகைமை:- G. C. E (O/L)

ஆரம்பம்:- 5. 1. 89 10. 00 a m (Thursday)

ABLE TECHNICAL STUDIES
SCIENCE CENTRE
Post Office Road, CHAVAKACHCHERI
(8713)

## விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

### A/L கலை, வர்த்தக மீட்டல்

### DAY CLASSES

ஆரம்பம்: 9-1-1989 (காலை 8. 00)

SAT & SUN CLASSES

ஆரம்பம்: 15-1-1989 [காலை 8 - 00]

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு.

| | | |
|---|---|---|
| பொருளியல்: | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம்: | — | திரு லங்கா |
| கணக்கியல்: | — | திரு வன்னியசிங்கம் |
| அளவையியல்: | — | திரு சுப்பிரமணியம் |
| இந்து நாகரிகம்: | — | திரு காரை-சுந்தரம்பிள்ளை |
| தமிழ்: | — | திரு. குழந்தை |
| புவியியல்: | — | திரு. குணராஜா |
| அரசியல்: | — | திரு. மஃறூப் |

90 ஆண்டுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன

(C-1076)


# கண்ணீர் அஞ்சலி

31—12—88 ஆம் திகதியன்று மதவாச்சியில் அகால மரணம் அடைந்த எமது சங்க சாரதி

## திரு. வை. தங்கராசா அவர்களுக்கு

எமது கண்ணீர் அஞ்சலி

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
## சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதியகொடி

கொழும்பு ஜன 3

புதிய ஜனாதிபதிக்கு என தனிக்கொடி தயாரிக்கப்பட்டிருக்கிறது.

கொடியின் நான்கு மூலைகளிலும் நான்கு அரச இலைகள் இருக்கும். மத்தியில் தாமரைப்பூவும், நெற்கதிர்களும் அமையும்.

நான்கு அரச இலைகளும் அன்புடன் கூடிய கருணை, அனுதாபம், அதனால் வரும் இன்பம் அமைதிக்கும் ஒற்றுமைக்கும் வழிகோலும் சமத்துவம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுகின்றன.

தாமரைப் பூவானது ஒற்றுமை, ஒழுங்குமுறை மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றையும் பொன்னிற நெற்கதிர்கள் மேம்பாடு, வளர்ச்சி மற்றும் நற்பயன்களையும் தெளிவுறுத்துகின்றன. (உ-எ)

தெல்லிப்பளையில் நிர்மாணிக்கப்பட்ட

# புற்று நோயாளருக்கான விடுதி இம்மாதம் திறக்கப்படும்

## 30 பேர் தங்குவதற்கு வசதி

யாழ்ப்பாணம் ஜன 3

தெல்லிப்பளை வறுத்தலைவிளானில் நிர்மாணிக்கப்பட்ட புற்றுநோயாளருக்கான விடுதி இம்மாதம் திறந்துவைக்கப்படும்.

சுமார் 30 நோயாளர்கள் தங்கியிருக்கக்கூடிய இந்த விடுதியை வடமாகாணப் புற்றுநோய்ச் சங்கம் நிர்மாணித்துள்ளது.

இந்த விடுதியைக் கட்டுவதற்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழும் பலரும் நிதி உதவி வழங்கினார்கள். அவர்களுக்கு வடமாகாண புற்றுநோயாளர் சங்கத் தலைவர் டாக்டர் மா. ஜெகநாதன் நன்றி தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக அவர் விடுத்த அறிக்கை ஒன்றில் பின்வருமாறு அறிவித்திருக்கிறார்:—

இவ்விடுதியைச் சரிவரப் பராமரிப்பதற்கும் விடுதி ஊழியர்களின் ஊதியத்திற்கும் மருந்துவகை ஆகாரவகை வாங்குவதற்கும் எங்களிடம் நிதி வசதி குறைவாக இருப்பதால் மீண்டும் பெருமக்கள் ஆகிய உங்களின் உதவியைத் தொடர்ந்து நாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

வசதியுடையோர் விரும்பினால் வருடம் வருடம் தங்கள் குடும்ப அங்கத்தவர் ஒருவரின் பிறந்த நாளன்றோ அல்லது திவஷ தினத்திலன்றோ பொருளுதவி செய்யலாம். நிதி உதவி அளிப்போர் காசோலைகளை ''வடமாகாணப் புற்றுநோய்ச் சங்கம்'' என்ற பெயரில் எழுதித் தலைவரின் முகவரிக்கு அனுப்பும்படி வேண்டுகிறோம்.

அரிசி, மா, காய்கறி பலசரக்கு முதலியவற்றை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் விடுதியில் (திறந்த பின்) ஒப்படைக்கலாம்.

ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட நாளில் அன்னதானம் செய்ய விரும்புவோர் சமையலுக்குரிய பொருள்களையோ அல்லது சமைத்த ஆகாரத்தையோ— ஒன்று இரண்டு அல்லது மூன்று நேரத்திற்கோ என்று தெளிவாகக்குறிப்பிட்டுஅன்னதானத் தினத்தையும், தங்கள்பெயர் முகவரி முதலியவற்றைக் குறிப்பிட்டு எழுத்துமூலம் தெரிவிக்கவும். குறிப்பிட்ட திகதிக்கு ஒரு கிழமைக்கு முன் அந்நேரம் விடுதியில் எத்தனை நோயாளர் உள்ளனர் என்று நாம் அறிவிக்க வசதியாக இருக்கும்—என்று கேட்டுள்ளார் (அ)

## நாளை ஊர்காவற்றுறை உ.அ.அதிபர் பணிமனைக்கு வருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன 3

இந்தியாவில் இருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறை வந்திறங்கிய அகதிகளில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களின் குடும்பத் தலைவர்கள் நான்காம் திகதி ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு சமுகமளிக்கும்படி கோரப்பட்டுள்ளனர்.

குடும்பத் தலைவர் அல்லாத ஏனையவர்களில் ஒருவர் இந்தியா சென்றிருந்தால் அவர் குடும்பத் தலைவருடன் வரவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட சகல ஆவணங்களையும் நான்காம் திகதி உ. அ. அ. அலுவலகத்துக்கு செல்லும் போது கொண்டு செல்ல வேண்டும். (அ-10)

## திருடன் பிடிபட்டான்

கோப்பாய், ஜன 3

நீர்வேலி கரந்தன் பகுதியில் திருட முயன்ற ஒருவர் பொதுமக்களிடம் வகையாக மாட்டிக் கொண்டார்.

திருடர்களில் ஒருவர் கடையின் ஓட்டைப் பிரித்து பொருள்களை எடுக்க முயன்றபோது சத்தம் கேட்டு அயலவர்கள் கூச்சலிட்டனர்.

தணைக்கு வந்த திருடர்கள் ஓடிவிட கடைக்குள் இருந்த திருடன் பிடிபட்டான்

இவரைப்பொதுமக்கள் விசாரித்தபோது கல் உடைக்கும் தொழில் செய்பவர் எனத் தெரிய வந்ததாம். (சி-72)

## சந்தை இடவரி அதிகரிப்பு

கொக்குவில் ஜன 3

1989 ஆம் ஆண்டுக்கான சந்தைஇடவரியை திருநெல்வேலி சந்தை குத்தகை நிர்வாகிகள் உயர்த்தியுள்ளனர்

இது வரை ஏழு ரூபாவுக்குப் பெறப்பட்ட இடவரி ஒன்பது ரூபாவாகவும் பத்துரூபாவுக்குப் பெறப்பட்டது பன்னிரெண்டு ரூபாவாகவும் பதினேழு ரூபாவுக்கு பெறப்பட்டது பத்தொன்பதுரூபாவாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. (இ-66)

## பிரியாவிடை வைபவம்

நீர்வேலி ப. நோ. கூட்டுறவு சங்கக் கிளையில் பொது முகாமையாளராகக்கடமையாற்றி ஓய்வுபெறும் திரு சுப்பிரமணிய சர்மாவுக்கு சிக்கன சேமிப்பு சங்கத்தினால் பிரியாவிடைவைபவம் நடத்தப்பட்டது

வைபவத்தில் மின்விசிறி ஒன்றும் அவருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது (சி-72)

## நான்கு வருடத்தின் பின்னர் வேலை பூர்த்தி

மண்டைதீவு, ஜன 3

மண்டைதீவு மகா வித்தியாலய புதிய கட்டட வேலைகள் வித்தியாலய ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

நாட்டின் நிலைமை காரணமாக இக்கட்டட வேலைகள் நான்கு வருடங்களுக்கு மேலாக அரைகுறையாகஇருந்து வந்தன.

இக்கட்டடத் திறப்பு விழா விரைவில் நடைபெறவிருக்கின்றதென்று வித்தியாலய உப அதிபர் திரு. எம். ஜி. நடராசா தெரிவித்தார். (சி-88)

## கொழும்பில்

யாழ்ப்பாணம் ஜன 3

வறுமை ஒழிப்பு சம்பந்தமான ஒரு மாநாடு கொழும்பு, தாய் சேய் நிலைய தலைமையக மாநாட்டு மண்டபத்தில் இன்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசதலைமையில்நடைபெறும். (இ-18)


## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம்

**SPOKEN ENGLISH**

WITH

**GRAMMER**

BY

**BRITTO**

புதிய பிரிவு:

ஆரம்பம்- 07 - 01 - 89

பிரிவு I - காலை 8 மணி

பிரிவு II - மாலை 3 மணி

(1066)



## G.C.E. O/L பரீட்சையில்

ஆங்கிலத்தில் விசேட சித்தி பெற [D]

ஓர் அரிய சந்தர்ப்பம்

பெப் 89-இல் நடைபெறவுள்ள பரீட்சைக்கான

**SPECIAL O/L ENGLISH**

RAPID REVISION CLASS

1 1/2 மாத துரித பயிற்சி

ஆரம்பம்: 7-1-89 பி.ப. 1 மணி

முதன்மை வாய்ந்த அஸ்ரன் ஆங்கில ஆசிரிய குழுவின் இணைந்த சேவை.

- வாராந்தம் 8 மணித்தியால போதனை
- இலவச பாடக் குறிப்புகள்
- மாதிரி வினா - விடைப்பயிற்சிகள்
- கட்டணம் ரூபா. 150/- [முழுப்பயிற்சிக்கும்]

விபரங்களுக்கு:

**அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்**

101/10, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்

(மக்கள் வங்கிக் அருகாமையில்)

C/1050)



## BECON

156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 89**

வினாவிடை - வகுப்பு

பொருளியல்

S. வரதராஜன்

Week - end Class

7-1-89 சனி

பிரிவு I 8.00 a.m.

பிரிவு II 1-00 p.m.

Day Class

9-1-89 திங்கள் 11-00 a. m.

பொருளியல் பகுதி II

சென்மதி நிலுவை

ஆரம்பம் 7-1-89 சனி 11-00 a.m.

(C/1061)



## புதிய உயர் கல்லூரி

90 ஆம் ஆண்டிற்கான

G. A, Q புதிய பிரிவு

ஆரம்பம்: 7. 1. 89

A/L 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்:

பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

**B.A 89**

புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

நிர்வாகி:

ச. அருள்நங்கை

புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(1068)



## Computer Programming and Data Processing in Basic Language

பயிற்சிக் காலம்: 2 மாதம்

கட்டணம் 950/- (இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)

ஆரம்பம்: 09 - 01 - 1989

(திங்கள், புதன், வெள்ளி, வகுப்புகள்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.

மின்சாரத்தடை இன்றி குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி IBM (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும் பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

* குறிப்பிட்ட தொகை மாணவ, மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்து கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 07 - 01 - 1989

**UNIKCO COMPUTER CENTRE**

No. 5 மின்சார நிலைய வீதி,

2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(உதயதாரகைக்கு அருகாமை) [C/1028]



## T. V. ரவல்ஸ் & ரூரிஸ்ட்

பெருமையுடன் வழங்கும்

# உடனடி வேலைவாய்ப்புக்கள்

★ சவூதி அரேபியா

கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் தற்சமயம் எம்மிடமுண்டு

| | | VACANCY | SALARY SR SR |
|---|---|---|---|
| (1) | A/C Foreman | 1 | 750 + 150 FA |
| (2) | Foreman | 1 | 750 + 150 FA |
| (3) | Hull Fereman | 1 | 750 + 150 FA |
| (4) | Syncro Lift Supervisor | 1 | 750 + 150 FA |
| (5) | Electrician | 1 | 750 + 150 FA |
| (6) | Machinest | 1 | 650 + 150 FA |
| (7) | Plumber | 1 | 650 + 150 FA |
| (8) | Crane / Eqmpt Operators | 2 | 750 + 150 FA |
| (9) | Divers (சுழியோடிகள்) | 3 | 750 + 150 FA |
| (10) | Store Keepers | 3 | 650 + 150 FA |
| (11) | Clerks | 3 | 650 + 150 FA |
| (12) | Diesel Mechanics | 3 | 650 + 150 FA |
| (13) | Cooks | 2 | 650 + 150 FA |

21yrs — 48 yrs

(14) றெஸ்ரோறன்ற் கீப்பர்ஸ் (Restaurant Keepers) 50 Vacancy Salary 350 SR

**With Food allowance paid**

**Age Limits:- 25 — 40 years**

WITHIN THREE WEEKS FLIGHT WILL BE ARRANGED.

**(Open Visa)**

முக்கிய குறிப்பு:-

1 — 13 வரையிலான வேலைகட்கு நேர்முகப் பரீட்சை கொழும்பில் 10 - 1 - 89, 11, 12, 13, 14-1-89 வரை நடைபெறும் எனவே கடவுச் சீட்டு, மூன்று கடவுச் சீட்டு அளவிலான போட்டோக்கள், அனுபவச்சான்றிதழ்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

# ★ குவைற் நாட்டில் ★

## வேலை வாய்ப்பு

★ **Kuwait**

300 Cleaners 35 K. D

(ஆண்கள் மட்டும்) No Food

வயதெல்லை: — 18—48 வரை

05 - 02 - 989 இல்தான் பிரயாணம் செல்லலாம்.

★ பெய்ரூட் - லெபனான்

உடனடி வேலைவாய்ப்பு

100 தொழிலாளர்கள் 100 U.S.D

இருவாரத்தினுள் பயணம் செய்யலாம்.

★ சவூதி அரேபியா

உடனடி வேலைவாய்ப்பு

300 கிளீனர்ஸ் 400 SR.

(ஆண்கள் மட்டும்)

| | |
|---|---|
| 60 கனரகச் சாரதிகள் | 600 SR. |
| 04 பேர் தச்சுத் தொழிலாளர்கள் | 650 SR |
| 04 பேர் மேசன் தொழிலாளர்கள் | 650 SR |
| 02 பேர் ஏயர் கொண்டிசன் மெக்கானிக் | 700 SR |

வயதெல்லை: 21—48 வரை

★ **Canada (கனடா)**

கனடா செல்வதற்கு விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

★ தாய்வான்

தாய்வான் நாட்டிற்கு தொழிலாளர்களுக்கான வெற்றிடம் எம்மிடம் உள்ளது கடவுச்சீட்டுடன் தொடர்பு கொள்ளவும்.

# T.V. TRAVELS & TOURIST

Railway Station (Front)

Brown Road, Kokuvil.

(C - 1020)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூர்த்தி செய்யப்படாத நிலையில் பனைவள ஆய்வுகூடக் கட்டடம்

## இறுதி வேலைகள் நடைபெறுததால் பல லட்சம் ரூபா வீண்போகும் அபாயம்

யாழ்ப்பாணம், ஜன. 3

நாவற்குழியில் அமைக்கப்பட்டிருக்கும் பனை வள அபிவிருத்திச் சபை ஆய்வுகூடக் கட்டடம் பூர்த்தி செய்யப்படாத நிலையில் கணிசமான ஒரு தொகைப் பணத்தை விழுங்கிய நிலையில் இருக்கிறது.

இந்தக் கட்டடத்தைப் பூர்த்தி செய்வதற்கென 23 லட்சம் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது.

இதுவரை 19லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டு கட்டடத்தில் பெரும்பகுதி பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது.

எனினும் இறுதி வேலைகள் பூர்த்தி செய்யப்படாத காரணத்தால் அது தற்போது இயற்கையின் சீரழிவுக்கும் விஷமிகளின் அழிவுக்கும் உள்ளாகி வருவதாகத் தெரியவருகிறது.

இந்தக் கட்டடத்துக்கென அமைக்கப்பட்ட பாரிய தண்ணீர்த்தாங்கி ஒன்று எழுபத்தைந்து சதவீதம் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் இருக்கிறது.

சம்பந்தப்பட்ட கட்டடத்தை அமைப்பதற்கென ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மிகுதி வேலைக்கான நிதி ஒதுக்கப்படாத காரணத்தால் இந்தக் கட்டடத்தைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருப்பதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (இ 5-ஐ)

## திருத்தப்படாதநிலையில் இயங்கும் கமநல சேவை நிலையம்

அசம்பாவித காரணங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்ட உடுவில் கமநல சேவை நிலையம் அதே நிலையிலேயே இயங்கி வருகிறது.

வழமையான பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் நிலயத்தின் அவலநிலை நீங்கவில்லை.

இதனால் அங்கு பணிபுரியும் ஊழியர்கள்; உட்பட விவசாயிகளும் பாதிக்கப் படுகின்றனர்.

இழந்து விட்ட தளபாடங்கள் ஈடு செய்யப்படாததால் நின்று கொண்டே படிவங்களை நிரப்ப வேண்டியுள்ளது.

குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் பாதிப்புக்குள்ளான கமநல சேவை நிலையங்கள் புனரமைக்கப்பட்டு வசதிகள் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது (சி-27)

### அராலியில் பயிர்கள் பாதிப்பு

அராலி ஜன 3

மழை இல்லாததால் அராலியில் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன;

அராலியில் 900 ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ள போதிலும் 100 ஏக்கருக்கே பயிர்க்காப்புறுதி செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-12)

## மரக்கன்று விநியோகம்

மாங்குளம், ஜன. 3

முல்லைத்தீவு மாவட்ட வீட்டுத்தோட்டப் போட்டி தொடர்பாக துணுக்காய், பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

தேசிக்காய், 300 கன்றுகளும் தோடை 300 கன்றுகளும், மாதுளை 100 கன்றுகளும், மா 100 கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு கமநலசேவை உதவி ஆணையாளர் திரு எஸ் பஞ்சலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார். (சி-94)

### நியமனம்

பச்சிலைப்பள்ளி ஜன 3

சாவகச்சேரி நகரசபையில் களஞ்சியப் பொறுப்பாளராகக் கடமையாற்றிய செ சின்னத்துரை முதலாம் தர களஞ்சியப் பொறுப்பாளராகவும், நகரசபை நூல் நிலயத்தில் உதவி நூலகராகக் கடமையாற்றிய செல்வி முருகேசு சிவபாக்கியம் நூல் நிலயப் பொறுப்பாளராகவும் திருகோணமலை நகரசபைக்கு உள்ளூராட்சி சேவைகள் பணிப்பாளரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். (இ)

### மரக்கறி நாற்றுக்கள்

அராலி ஜன 3

''விவசாய இலாகாவால் சிபார்சு செய்யப்பட்ட எம். ஐ - 1 எம் ஐ. 2'' மிளகாய் நாற்றுக்கள், கத்தரி நாற்றுக்கள் பூக்கோவா, முட்டைக்கோவா நாற்றுக்கள், மரக்கறி விதைகள் ஆகியவை தேவையான விவசாயிகள் அராலி கமநல சேவைகள் நிலைய உப அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (இ-12)

### காரைநகரில்

காரைநகர் பத்தர் கேணியைச் சேர்ந்த சோட்டர் சிவா என்ற இளைஞர் தமது உயிரை மாய்த்துக் கொண்டார். (இ-73)

# செவன சரணவின் கீழ் ரூ. 10 ஆயிரம் பெறுவோர்

''செவன சரண'' 10 கோடி ரூபா வீடமைப்பு மானியத் திட்டத்தின் கீழ் யாழ். மாநகரசபை எல்லைக்குள் தலா 10 ஆயிரம் ரூபா மானியம் பெற தெரிவான மொத்தம் 83 குடும்பங்களில் குருநகர், வண்ணார்பண்ணைப் பகுதிகளில் மானியம் பெறும் 17 குடும்பங்களின் விவரங்கள் உதயனில் ஏற்கனவே வெளிவந்தன.

ஏனைய பகுதிகளில் தெரிவானவர்களின் விவரம் வருமாறு;

**கந்தர்மடம்**

1. வல்லிபுரம் அன்னலிங்கம், 2. திருமதி தி. நிற்று, 3. சின்னத்தம்பி செல்லத்துரை, 4. த. தித்தூஸ், 5. ந. ரகுலேஸ்வரன்.

**நல்லூர்**

1. திருமதி சரஸ்வதி புண்ணியமூர்த்தி, 2 கி. கமலம், 3 செல்வி க. தையல்நாயகி, 4. திருமதி அ. கலாவதி.

**அரியாலை மேற்கு**

1. செல்வராசா இந்திராதேவி, 2 நமச்சிவாயம் சிவானந்தன்; 3 சுப்பிரமணியம் பவானந்தன், 4 லிங்கநாதன் சுசீலாமல்காந்தி, 5. சொக்கலிங்கம் பத்மநாதன், 6. எஸ் சதாசிவம்பிள்ளை, 7. சி. பெருமாள்பிள்ளை, 8. செல்வி ந. சிவநேசநாயகி, 9. வல்லிபுரம் ராபசிங்கம்.

**அரியாலை கிழக்கு**

1 யேசுநாதன் மத்தினம்மா, 2. கா. பரஞ்சோதி: 3' இ. கிருஷ்ணபிள்ளை.

**கொழும்புத்துறை**

1 திருமதி ந. வாசுகி, 2. நா. சுவாமிநாதன், 3. தி. பத்மநாதன், 4. சு. நவரத்தினம், 5. சு. யோகராணி, 6. அ. தங்கவேலு, 7. ந. பொன்னம்பலம், 8. திருமதி யோ. ரஞ்சிதமலர், 9. திரு. இ நிமால், 10. திரு. ச. கனகலிங்கம், 11 திருமதி க. அன்னலட்சுமி

**நாவாந்துறை**

1 குலசபிலிப். 2. (5ஆம் பாக்கம் பார்க்க)

### இலவசபாட புத்தகங்கள்

புங்குடுதீவு கோத்தணிப் பாடசாலைகளுக்குரிய மாணவர்களின் இலவச பாடப் புத்தகங்கள் பாடசாலை அதிபரூடாக வழங்கப்பட்டு வருகின்றன. (இ-131)

### வீதிகளின் அவல நிலை

கரவெட்டி, ஜன. 03

கரவெட்டி கிழக்கு அம்மன் கோவில் வீதி, சோனப்பு வீதி, விக்னேஸ்வர வீதி ஆகியவை பழுதடைந்துள்ளன. இதனால் கொடிகாமம் வீதியூடாக நெல்லியடி செல்வது பெரும் கஷ்ட நிலையை ஏற்படுத்தி உள்ளது.

இதேவேளை வல்லை துன்னாலை வீதியும் பழுதடைந்துள்ளது. இதனால் கல்லுவம், மண்டான் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ-70)

### 7 பேர் சித்தி

1988 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு 6 வகுப்பிற்கான புலமைப் பரிசில் பரீட்சையில் நெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இருந்து 7 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். (இ-68)

# இறைவன் வழங்கும் அருளும் இயற்கையும் மனச்சாந்தி தரும்

## பரிசளிப்பு விழாவில் உரை

சுழிபுரம், ஜன 3

இறைவன் அருளும் இயற்கையும் எமக்கு மனச்சாந்தியை ஏற்படுத்தவல்லன. எங்களது ஆன்மீக வளர்ச்சிக்கு சாதனைகள் வேண்டும். இளமையில் மனனம் செய்வது, மன அமைதியை ஏற்படுத்த வழி ஆகும். திருவாசகம் தேன்தனைப் பருக யார்தான் பின்நிற்பார், திருவெம்பாவைப் பாடல்களைப் மனனம் செய்த பிள்ளைகள் ஏனைய திருவாசகப் பாடல்களை படிக்க முயலவேண்டும். இதற்கு சமய நிறுவனங்கள் வழி காட்டிகளாக அமைய வேண்டும்.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் சுழிபுரம் இந்து இளைஞர் சங்கத்தினர் நடத்திய திருவெம்பாவை மனனப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குரிய பரிசுகளை வழங்கிப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

சுழிபுரம்வடக்கு சிவன் கோயில் மண்டபத்தில் இந்த வைபவம் நடைபெற்றது.

பரிசளிப்பு விழாவிற்கு சங்கத்தலைவர் திரு. ந. சிவரஞ்சன் தலைமை வகித்தார்.

பெரும் எண்ணிக்கையிலான பிள்ளைகள் வைபவத்தில் பங்கு கொண்டனர்.

பிரம்மஸ்ரீ எஸ் தியாகராசக்குருக்கள் ஆசியுரை கூறினார்.

சுழிபுரம் சாந்தை சிற்றம்பல வித்தியசாலை அதிபர் திரு க நடராசா பேசுகையில் 'நாம் இயற்கையும் இறைவனையும் நம்புவோம். திருவாசகத்தைப் பருகுவோம்,' என்றார்.

போட்டியில் பங்கு கொண்டு பரிசு பெற்றவர்கள் பெயர்கள் வருமாறு:-

சி. சிவசுசி, இ சிவசுதா, சி தேவகுமாரி, சி ரதிவதனி, பா அனுஷா, து உதயகுமார், கு செல்வநாயகி, இ கணேசகுமார், இ கௌரி, சி தவச்செல்வி, ந ஜெயகௌரி சு தவராணி, தி நல்லீஸ்வரி, க ஞானேஸ்வரி, சி செல்வக்குமார்.

பொ ஜெயரஞ்சினி, கு தாருகா, செ மகாலட்சுமி, வி ஜெயகௌரி, க தவப்பொன். நா கௌரி, சி பரமேஸ்வரி தி பத்மநாதன், சி சிவசுதன், தி சுணேஸ்வரி, தி செல்வேஸ்வரன். கி நித்தியா, மா சரோசா, சி இலகேஸ்வரன் இ சிவநிதா, நா மனோகரி, ந ஜெகமதி, சி இதயகுமார். (இ-28)

### பொன்னாலை பாலம் கடல் அரிப்பால் பாதிப்பு

காரைநகர், ஜன 3

காரைநகரையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் பொன்னாலைப் பாலம் கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்டு வருகிறது.

இதேபோன்று காரைநகர் துறைமுகம் செல்லும் கிழக்கு வீதி வயல் வெளியில் அமைந்துள்ள இரண்டு மதகுகள் சேதமுற்றுள்ளன.

இதனால் போக்குவரத்துப் பாதிக்கப்படும் ஆபத்து இருந்து வருகிறது. (இ-73)


# முக்குக்கண்ணாடிகள்

(Reading Glass with Latest Frames)

அழகான பிறேம்களுடன் கூடிய இறக்குமதி செய்யப்பட்ட மூக்குக் கண்ணாடிகள், +1.00 தொடக்கம் + 4.00 வரையிலும் தற்போது பெற்றுக்கொள்ளலாம். சொற்பதொகையே உள்ளதால் தேவைகளுக்கு முந்திக்கொள்ளுங்கள். விலை 62/- இல் இருந்து சகல விலைகளிலும்,

(f) பென்வி ஹவுஸ்,

68 பெரியகடை, (மின்சார நிலைய வீதி)

யாழ்ப்பாணம்.

(1073)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி சிவயோகம் இராசதுரை**

தோற்றம்: 10-4-1937 மறைவு: 4-12-1988

இல்லக விளக்காகி எமக்கு எல்லாம் பேருதவியாக விளங்கிய எம் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மைப் பிரிந்தாலும் உங்கள் அன்பு தவழும் இனிய முகமும், பண்பு கலந்த இனிய பேச்சும், தெய்வத் தோற்றமும் என்றும் எம் நெஞ்சை விட்டு அகலாது.

மக்கள், மருமக்கள்,

பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

(C 1042)



# ENGLISH FOR BEGINNERS

ஆரம்ப நிலையிலிருந்து

**ஆங்கில மொழிப் போதனை**

ஆங்கில அறிவு இல்லாதவர்கள் கூட சேர்ந்து கற்கலாம்.

- ✶ புதிய வகுப்பு
- ✶ நவீன முறை
- ✶ பயன்மிக்கது.

ஆரம்பம்: 7.1 89 மு. ப. 8-30 மணி

அஸ்ரன் ஆசிரிய குழுவின் இணைந்தசேவை

கற்கை நெறி:- SPEECH, READING, WRITING:

- ✶ காலம் 4 மாதங்கள்
- ✶ சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
- ✶ இலவச பாடக்குறிப்புகள்
- ✶ கட்டணம் ரூபா. 250/- (முழுப்பயிற்சிக்கும்)

விபரங்களுக்கு:

**அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்**

101/10, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.

(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

(C/1045)



I. E. T. Technical Institute

11 B, Stanly Road, Jaffna.

(விவேகானந்தா அச்சகத்திற்கு முன்பாக)

✶ எலெக்ரிஷன் ✶ வெண்டிங்

பயிற்சி அளிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்கள்.

ஆரம்பம்: 06. 01. 1989

(C/1025)



# FORTUNA ENTERPRISES

(Lobour Licence No. 79)

Immediate Vacancies in Kuwait

**உடனடி வேலை வாய்ப்புக்கள்**

✶ குவைத்

1. **Airport and Hospital Cleaners**
   விமான நிலைய, ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர் — 50
   சம்பளம், 35 KD
   அத்துடன் மேலதிக வேலை இருப்பிடவசதி
   4 - 1 - 89க்கு முன் பாஸ்போட்டுடனும் 7 போடடோக்களுடனும் விண்ணப்பிக்கவும்.
   10 — 2 — 82 க்கு முன் பிரயாணமாகலாம்.
2. **First Class Electricians** — 4
   சம்பளம்: 70 - 95 KD
3. **Heavy Vehicle Drivers**
   (கனரக சாரதிகள்) — 15
   சம்பளம்: 90 KD
4. **Labourers (Diggers)**
   நிலம் தோண்டுபவர் — 4
   சம்பளம்: 40 - 45 KD

நாட வேண்டிய முகவரி; யாழ்ப்பாணப் பிரதிநிதி:

**இ. விஸ்வேஸ்வராயன்**

3ஆம் கட்டை லேன், கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

(C/1074)



# உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

## ★ குவைத்

| | | | |
|---|---|---|---|
| 1. | Rotating equipment Engineer | 250 KD | 3 பேர் |
| 2. | Plant Condition Monitoring Engr. | 250 KD | 1 ,, |
| 3. | Mechanical Engineer - shop | 250 KD | 1 ,, |
| 4. | Supervisor Field | 105 KD | 3 ,, |
| 5. | Supervisor Rigging | 105 KD | 1 ,, |
| 6. | Supervisor Machining | 105 KD | 1 ,, |
| 7. | Supervisor Welding & Fabn | 105 KD | 2 ,, |
| 8. | Field Maintenance Mechanic Gr. 2 | 70 KD | 70 ,, |
| 9. | Machinery Mechanic Gr. 2 | 70 KD | 54 ,, |
| 10. | Machinist | 55 KD | 8 ,, |
| 11. | Bench Fitter | 55 KD | 2 ,, |
| 12. | Welder Gr. 2 | 60 KD | 7 ,, |
| 13. | Fabrication Machanic | 60 KD | 1 ,, |
| 14. | Rigger / Scaffolder Gr. 2 | 50 KD | 15 ,, |
| 15. | Crane Operator | 60 KD | 6 ,, |
| 16. | H. E Driver | 60 KD | 9 ,, |
| 17. | Insulator | 45 KD | 3 ,, |
| 18. | Mason / Gunniter Helper | 45 KD | 4 ,, |
| 19. | Coke Supervisor | 105 KD | 4 ,, |
| 20. | Coke Drum Mechanic Gr. 2 | 65 KD | 18 ,, |
| 21. | Concoyor Mechanic Gr. 2 | 60 KD | 14 ,, |
| 22. | Bridge Crane Operator | 60 KD | 4 ,, |
| 23 | Truck Driver | 60 KD | 10 ,, |

**Food Allowance 20 KD**

உடன் தொடர்பு கொள்ளவும்

**அ. தவச்செல்வம்** B.Sc (Hons)

(ஆசிரியர்)

நெல்லியான் வீதி,

சுளிபுரம்.

(C/1075)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "அத்துளு" நன்னீர்த் திட்டம் இயங்காத நிலையில்

## 1,200 குடும்பங்கள் பாதிப்பு

கரவெட்டி, ஜன. 03

கரவெட்டிப் பகுதியின் பெரும்பாலான மக்களுக்கு குடி தண்ணீர் வழங்கிவந்த 'அத்துளு' நன்னீர்த்திட்டம் தற்போது இயங்காத நிலையில் உள்ளது

மின்சாரப்பிரச்சினையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

கரவெட்டிப் பகுதியில் சுமார் ஆயிரத்து இருநூறு குடும்பங்களின் தண்ணீர்ப் பிரச்சினையை இத்திட்டம் நீக்கி வந்தது.

இந்தத் திட்டம் முன்னுள் உடுப்பிட்டி எம்.பி திரு. எம் சிவசிதம்பரத்தின் முயற்சியினால் தற்போதைய ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவினால் திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தற்போது வழங்கப்படும் சொற்ப மின் சாரத்தைப்பயன்படுத்தி இந்தநீர்விநியோகத்தை மீண்டும் ஆரம்பிக்க முடியாதா என்று பொது மக்கள் கேட்கிறார்கள் (இ-70)

## கைது!

அராலி ஜன 3

அராலிப் பகுதியில் கொள்ளைகளில் ஈடுபடுவோர் என சந்தேகிக்கப்படும் சிலரை இந்திய அமைதி காக்கும் படையினர் கைது செய்தனர். (இ-12)

## மார்பு நோய் சிகிச்சை நிலையம்

யாழ்ப்பாணம், ஜன. 03

யாழ்ப்பாணப் பண்ணையிலிருந்த மார்பு நோய் சிகிச்சை நிலையத்துக்கு புதிய கட்டடமொன்றை அமைப்பதற்கு சர்வதேச குழந்தைகள் அவசர நிதியம் (UNICEF) நிதி வழங்க முன்வந்துள்ளது.

யாழ் நகரை விட்டு வெளியிடங்களில் இதனை அமைக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. (இ-18)

## பாதையைச் சீர்செய்தும் பஸ்கள் ஓடவில்லை

வல்வெட்டித்துறை, ஜன 03

பருத்தித் துறையில் இருந்து யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, சுன்னாகம் ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் தம்பசிட்டி வீதி தற்போது சீர் செய்யப்பட்டுள்ளது.

எனினும் மீண்டும் இ போ. ச. பஸ்சேவை இவ் வீதியால் ஆரம்பிக்கப்படவில்லை.

மரம் ஒன்று வீதியின் குறுக்கே சரிந்ததை அடுத்து கடந்த சில மாதங்களாக மேற்படி வீதியில் வாகனப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன.

தற்போது மரம் அகற்றப்பட்டு பாதையும் சீர் செய்யப்பட்டுள்ளது.

751, 763, 752, 757 இலக்க இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ்கள் முன்னர் இவ் வீதி ஊடாக போக்குவரத்தை நடத்தி வந்தன என்பது குறிப்பிடத் தக்கது. (சி-160)

## பழுதடைந்த நிலையில் கோப்பாய் "இராஜ வீதி"

கோப்பாய், ஜன. 3

கடந்த மூன்று வருடங்களாகக் கோப்பாய் இராஜ வீதி திருத்தப்படாது பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இவ் வீதியின் இரு மருங்கிலும் சுமார் 3 மைல் தூரம் விளை நிலங்களே உள்ளன.

இவற்றுக்குத் தேவையான பசளை வகைகளையும் விளைபொருள்களையும் கொண்டு செல்வதில் விவசாயிகளுக்குப் பெரும் சிரமம் ஏற்படுகின்றது.

இப்பாதையில் காணப்படும் குழிகளை நிரப்புவதற்கு மக்கி மண்ணை பொதுமக்கள் உபயோகித்ததனால் மழைக் காலங்களில் இப்பாதை வழியாகச் செல்லும் வாகனங்கள் புதையுண்டு போகும் நிலை ஏற்படுகிறது.

மினிபஸ் சேவையும் இப்பாதையில் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் வசிக்கும் மக்கள் யாழ்ப்பாணம் வருவதற்கு சுமார் ஒருமைல் தூரம் நடந்து வந்தே பஸ் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. (சி-72)

## நூல்வெளியீட்டு விழா

பருத்தித்துறை, ஜன 3

பருத்தித் துறையில் யதார்த்தா கலை இலக்கிய வட்டத் தலைவர் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தனால் எழுதப்பட்ட "தாயாகப் போகும் உங்களுக்கு" "எயிட்ஸ்" ஆகிய இரு நூல்களும் தைப்பொங்கல் தினத்திற்கு மறுநாள் வெளியிடப்படும்.

பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ள இந் நூல் வெளியீட்டுவிழாவுக்கு வைத்திய கலாநிதி கே. சுகுமார் தலைமை வகிப்பார்.

இதற்கான ஒழுங்குகளை யதார்த்தா கலை இலக்கிய வட்டச் செயலாளர் திரு ஏ. என். எஸ். திருச்செல்வம் மேற்கொண்டுள்ளார். யதார்த்தா கலை இலக்கிய வட்டத்தின் இரண்டாவது நூல் வெளியீடு இதுவாகும். (இ- 118)

## ஓய்வு

கொழும்பு, ஜன 3

இறைசேரிச் செயலாளர் பதவியில் இருந்து திரு. சி. சண்முகம் ஓய்வு பெறுகிறார். (இ-எ)

## செவன சரணவின்.....

(4ம் பக்கத்தொடர்ச்சி)

இராசரத்தினம் ஆனந்தம், 3. வேதநாயகம் குணமணி, 4. செல்வராசா ஆரோக்கியம், 5 பேதுருப்பிள்ளை ஹர்த்தம்மா, 6 க முத்துக்குமார், 7. தொம்மை வரப்பிரகாசம், 8 செல்வி அ. மனோன்மணி, 9. திருமதி பா. கஸ்பார், 10. அ.பரஞ்சோதி, 11 இ. அந்தோனிப்பிள்ளை (சருமு), 12. செ ஆனந்தராசா

**சூரியவெளி**

1. திருமதி இ. இல்லறி சந்திரா, 2. செ. பாக்கியவதி அமலஉற்பவம், 3. ஜெ. அல்போன்ஸ்.

**மடம் வீதி**

1. மா. ஞானசேகரம், 2 ஐ. பொன்னுப்பிள்ளை, 3 நா. தம்பிராசா, 4. சி. சகாயராசா, 5. சி. பாக்கியநாதன், 6. வே. சின்னவன்.

**முஸ்லிம்பகுதி**

1 உசன்தம்பி நெய்னா முகமது, 2. ஜலுப் மர்லியா, 3. மு. சல்ஹா உம்மா 4. மூமினா புஹாலி 5. மீரான்மகிதீன் ஜனூபா 6 காகுல் ஹமீட் ஹபீப் முகமது, 7. சேகுமுகிதீன் மன்சூர், 8. முகமது சுல்தான் மீராசியா.

**கொட்டடி-கொய்யாத்தோட்டம்**

1 திருமதி சு. இரத்தினம், 2 திருமதி த. யோகம்மா, 3 திருமதி பா. நாகேஸ்வரி, 4 திரு. சு. ஜெயபாலசிங்கம், 5 திருமதி க. நிர்மலா.

## சமய சந்நிதிகளில்

### சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.3

வட. அல்வை குருக்கட்டு அருள்மிகு அரசடி விநாயகர் ஆலயத்தில் நேற்று திங்கட்கிழமை நாவேந்திர சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி சங்காபிஷேகம் விநாயகபெருமானுக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் நடைபெற்று விசேஷபூஜைதீபராதனை இடம்பெற்றன.

அதைத் தொடர்ந்து மாலையில் விநாயகப் பெருமான் திருவீதியுலாவும் திருவூஞ்சலும் நடந்தன. (இ)

# அங்கவீனர் சிகிச்சை பெற 7 ஆஸ்பத்திரிகளில் வசதி

## பெல்ஜியம் நிறுவனம் உதவி

பருத்தித்துறை, ஜன. 3

பெல்ஜியம் ஊனமுற்றோர் சர்வதேச புனர்வாழ்வு வைத்தியத் துறையின் வைத்திய சேவை உதவிகளினால் பருத்தித்துறை, தெல்லிப்பழை, கிளிநொச்சி, சாவகச்சேரி, ஊர்காவற்துறை, மன்னார், திருகோணமலை வைத்தியசாலைகளில் அங்கவீனர்கள், பாரிசவாதத்தால் பீடிக்கப்பட்டோர் உடற்குறைபாடுகள் உள்ளோர் ஆகியோருக்கு சிகிச்சை வழங்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு பெல்ஜியத்திலிருந்து வந்திருந்த பெல்ஜியம் ஊனமுற்றோர் சர்வதேச புனர்வாழ்வு வைத்தியத்துறை உடற்சிகிச்சை ஆலோசக நிபுணர் திரு. கிருண்ட் ஜீன் யாழ். கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து ஒன்பது பயிற்சியாளர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு உடற் சிகிச்சை பற்றி இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கி இருந்தார்.

பயிற்சியை பூர்த்தி செய்த செல்வி. என். பவளேந்திரா, திரு. எஸ். தர்மலிங்கம், திரு. எம். கந்தவரோதயன் ஆகியோர் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கும் —

செல்வி என். கனகசாந்தி, திரு எஸ். சாந்தகுமார், திரு. எஸ். புரட்சிதாசன் ஆகியோர் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கும் —

திரு என். புவனேசன் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கும் —

செல்வி எஸ். நந்தினி ஊர்காவற்துறை அரசினர் வைத்தியசாலைக்கும் —

திரு. கே. கணேசன் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலைக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் குறிப்பிட்ட வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு உடற்சிகிச்சைகளை வழங்குவார்கள்

பெல்ஜியம் ஊனமுற்றோர் சர்வதேச புனர்வாழ்வு வைத்தியத்துறை உடற்சிகிச்சை ஆலோசகர் நிபுணர் திரு. கிருண்ட் ஜீன் தற்பொழுது யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள முறிவுச் சிகிச்சை தொழில் நிலையத்தில் ஆலோசனை வழங்கி வருகின்றார்.

பெல்ஜியம் ஊனமுற்றோர் சர்வதேச புனர்வாழ்வு வைத்தியத்துறை மேலும் இரு நிபுணர்களை இங்கு அனுப்பி வைக்கவுள்ளது.

அதில் ஒருவர் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையிலிருந்து புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வார். மற்றவர் மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு வைத்தியசாலைகளில் உடற்சிகிச்சைப் பிரிவுகளை ஆரம்பித்து நோயாளர்களுக்கு உடற்சிகிச்சைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார். (இ-118)

## யாழ் மாவட்டத்துக்கு மேலும் ஒரு தொகுதி பாட நூல்கள் வந்தன

சுன்னாகம், ஜன. 3

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் உபயோகத்துக்கான பாடநூல்களில் மேலும் ஒரு தொகுதி அண்மையில் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கோரப்பட்ட நூல்களில் குறைவாக அனுப்பப்பட்டவையும் முழுமையாக அனுப்பப்படாதவையுமே இம்முறை வந்து சேர்ந்துள்ளன.

இப்பாட நூல்கள் [illegible] அதிபர்களின் காரியாலயங்களில் கையளிக்கப்பட்டுள்ளன.

கையளிக்கப்பட்ட நூல்களை முதலாந் தவணை ஆரம்பத்திலேயே மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

யாழ். கல்வித் திணைக்களம், பாடநூல்களை மூன்றும் தவணைக்காலம் முடிவடையும் போதே மாணவர்களுக்குவழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் போக்குவரத்துப் பிரச்சினையால் புத்தகங்கள் வந்து சேர்வதில் காலதாமதம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (சி-57)

## கூட்டுறவு ஊழியருக்கு ஊக்குவிப்பு நிதியாக ஒருமாதச் சம்பளம்

காங்கேசன்துறை ஜன 3

நெருக்கடியான காலகட்டத்தில் கூட்டுறவுச் சங்கத்தின் சேவைகள் மக்களுக்கு கிடைக்கச் செய்வதில் ஆர்வத்துடன் செயலாற்றிய கூட்டுறவு ஊழியர்களுக்கு தெல்லிப்பழைபலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒருமாத சம்பளத்தை ஊக்குவிப்பு நிதியாக வழங்கியது.

கடந்த ஆண்டுகளில் மிகவும் நெருக்கடியான சூழ்நிலைகள் ஏற்பட்டு மக்கள் தமக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்களைக் கூட பெற முடியாத நிலை ஏற்பட்ட பொழுது கூட்டுறவுச் சங்கங்கள் பலத்த கஷ்டங்களின் மத்தியிலும் மக்களுக்கு உணவுப் பொருள்களை வழங்கி வந்தன.

இவ்வாறுனபணிகளில் ஒத்துழைத்து ஆர்வமுடன் பணியாற்றிய கூட்டுறவு ஊழியர்களுக்கே ஒரு மாத சம்பளத்தை ஊக்குவிப்பு நிதியாக தெல்லிப்பழை ப நோ. கூ. சங்கம் வழங்கியுள்ளது.

இதற்கென 2½ லட்சம் ரூபாவை சங்க நிர்வாகம் ஒதுக்கியது.

ஊக்குவிப்பு நிதி வழங்கும் வைபவத்தில் சங்கத்தின் தலைவர் திரு.எஸ் சிவமகாராசா பேசுகையில் சங்கத்தின் சேவைகளை தொடர்ந்தும்திறம்பட மேற்கொள்ள ஊழியர்கள்ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். (இ- 68)

### வாழ்வகத்தில்

காங்கேசன்துறை ஜன 3

தெல்லிப்பழை விழிப்புலன் வலுவிழந்தோர் வாழ்வகத்தில் நத்தார் ஒளி விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

## வாசகர் திருமுகம்

### ஆஸ்பத்திரி 5 மாடிக்கட்டடம்: வேலைகளைதாமதியாது ஆரம்பிக்கவும்

தங்களது பத்திரிகையில் 27-12 1988 அன்று தலைப்புச் செய்தியாக வெளிவந்த 'யாழ் போதனா வைத்தியசாலைக்கு அமைக்கப்பட்டு வந்த 5மாடிக் கட்டடத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி மீண்டும் திறைசேரிக்குத் திரும்பிச் சென்றுள்ளது' என்ற செய்தி தொடர்பாக இக்கடிதத்தை எழுதுகிறேன்.

யாழ் ஆஸ்பத்திரிக்குரிய வசதி மிக்க ஒரு 5 மாடிக் கட்டடம் பூர்த்தியாக்கப்படாமல் அரைகுறையாக கடந்த ஒரு வருட காலமாக நிறுத்தப்பட்டிருந்தும் இதுவரையில் எந்த ஒரு பத்திரிகையும் அதைப் பெரிதுபடுத்தவில்லை. யாழ்நகரில் மேற்கொள்ளப்பட்ட ஒரு பாரிய திட்டம் தொடர்பாக பத்திரிகைகள் கவனயீனமாக இருந்தது கவலைக்குரியதாகும்.

ஆயினும் தற்போதாவது இது விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து உண்மை நிலையை தெளிவுபடுத்தச் செய்தி வெளியிட்ட உங்கள் பத்திரிகைக்கு எமது நிறுவனம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இக்கட்டிட வேலைக்கென அமர்த்தப்பட்ட எமது உத்தியோகத்தர்களின் இக்கட்டானநிலையை வெளிப்படுத்தியமைக்கும், இந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக எமது நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ள தர்மசங்கடமான நிலையை தெளிவுபடுத்தியமைக்கும் மேலும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஐந்து மாடிகள் கொண்ட ஆஸ்பத்திரிக் கட்டடத்தை இரண்டு வருட காலத்தில் கட்டிப் பூர்த்தியாக்கும் ஒப்பந்தம் 1985 ஆம் ஆண்டுநவம்பர் மாதம் எமது நிறுவனத்திற்கும் யாழ். செயலகத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

இக்கட்டட வேலைக்காக வெளிநாட்டிலிருந்து விசேட சாரங்களும் முட்டுக்களும் வரவழைக்கப்பட்டன. புதிய இயந்திர தொழில்நுட்ப உதவியுடன் பல தொழில் நுட்பவியலாளர்களும் இணைந்து துரிதமாக இக்கட்டடம் அமைக்கப்பட்டு வந்தது. 1987 இல் நடந்த அசம்பாவிதங்களின் போது இக்கட்டடவேலை நிறுத்தப்பட்டது. ஒரு வருட காலத்திற்கு மேலாகியும் இன்று வரையில் வேலை மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை.

கட்டட வேலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக எமது நிறுவனம் பலதடவைகள் யாழ் செயலகத்துடன் தொடர்பு கொண்டது. ஆனால் யாழ். செயலகத்தினர் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

யாழ். அரசாங்க அதிபரிடமும் தொடர்பு கொண்ட போது அவரினால்கூட எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பாக நேரடியாக நாம் கலந்தாலோசிப்பதற்கு நேரம் ஒதுக்கும்படி கேட்டும் அரசாங்க அதிபர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவில்லை.

எமது நிறுவனத்தில் இதற்காக வேலைக்கமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களின் நிலைமை தொடர்பாக யாழ் செயலகத்திற்கு அறிவித்தும் கூட அவர்கள் பாராமுகமாக இருந்துவிட்டனர்.

இக்கட்டட வேலையை மீண்டும் ஆரம்பிப்பதற்காக எம்மாலான முயற்சிகளை இதுவரை மேற்கொண்டும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை. எமது நிறுவனம் இக்கட்டட வேலையை எந்நேரத்திலும் ஆரம்பிப்பதற்கு தயாராக இருக்கிறது.

எனவே இக்கட்டட வேலை இடைநிறுத்தப்பட்டுள்ளதற்கும் நிதி திரும்பிச் சென்றதற்கும் எமது (சமக்கோன்) நிறுவனம் எந்தவகையிலும் பொறுப்பில்லை என்பதை தெளிவுபடுத்துகிறேன்.

இக்கட்டடவேலை உடனடியாக ஆரம்பிக்கப்படாமல் காலம் தாழ்த்தப்பட்டால் கட்டடத்தின் கட்டுமானத்தின், காலநிலை மாற்றத்தினால் பழுதுகள் ஏற்படலாம் தற்போது போடப்பட்டுள்ள கம்பிகள் துருப்பிடித்துள்ளன. எனவே இதை மீள அமைப்பதில் பெரும் சிரமங்கள் ஏற்படும். எனவே இவ்வேலை தாமதியாது ஆரம்பிக்கப்படுவதற்கு உரிய அதிகாரிகளும் யாழ். செயலகமும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எஸ். ருத்திரலிங்கம்,
திட்ட முகாமையாளர்.

சமக்கோன் நிறுவனம்,
யாழ்ப்பாணம்.


★ தரமான கலர்ப் படப்பிரதிகள் ★

★ அதிகுறைந்த கட்டணத்தில்
★ மிகக் குறுகிய காலத்தில்

கலர்ப்படச் சுருள்
கழுவுதல்
முற்றிலும் இலவசம்

நவீன கம்பியூட்டர்
இயந்திரத்தில் பிரதி செய்தல்
3 முதல் 5 நாட்களில்
விநியோகம்




ஷப்ருவை நாடுங்கள்

ஷப்ரு நிதி நிறுவனம்
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 22073


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**பொன்னையா ஆனந்தசுந்தரம்**
(தெல்லிப்பளை ப நோ. கூ. சங்க முகாமையாளர்)

தோற்றம்: 30 - 06 - 1933
மறைவு: 16 - 12 - 1987
திதி: 03 - 01 - 1989

ஆண்டொன்று சென்றாலும்
அன்புருவத்தை நாம் மறவோம்
ஈண்டு உம்மை நினைத்தே
இவ்வுலகில் வாழ்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தங்கள் பிரிவால் துயருறும்!
மனைவி, மக்கள், உற்றார், உறவினர்:

வளமாரி,
சட்டுவன்,
தெல்லிப்பளை. (8722)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



அமரர்
**சின்னத்தம்பி கணேசரத்தினம்**

மண்ணில்: 18 - 09 - 1920
விண்ணில்: 04 - 12 - 1988

பண்புக்கோர் திலகமென விளங்கு செம்மல்
பார்போற்றும் வர்த்தகராம்
சின்னத்தம்பி
எண்டிசையும் புகழோங்க பெற்ற மைந்தன்
இமயம்போல் நின்றிலங்கிக்
குடும்பங் காத்து
கொண்டபெரு கொள்கைகளைப்
பேணி என்றும்
குறித்தவற்றை எண்ணியாங்கு
செய்தே வெற்றி
கண்டபெரு வீரனார் கணேச ரத்தினம்
காற்றோடு கலந்தாரோ கழறாய்நெஞ்சே!

எம் வாழ்வின் வழிகாட்டியாய் ஒளிவீசி அணைந்து விட்ட அன்புச் சுடரே! அண்ணை மாமா! எம்மைச் சிறு வயது முதலே முன்னின்று ஆளாக்கி எம் கருமங்களையெல்லாம் பொறுப்பேற்றி நடத்தி இந்நிலைக்கு உயர்த்தி வைத்தீர்கள். அதுவுமல்லாமல் உதவி தேடி வந்தவர்க்கும், பிறந்த ஊருக்கும் முடிந்தளவு சேவையை இலைமறைகாயாக நின்று செய்து முடித்தீர்கள் திடீரென எம்மைத் துயரிலாத்தி மறைந்து விட்டாலும் உங்கள் அன்புள்ளமும், ஆற்றிய சேவைகளும், நீங்கா நினைவுகளும் எமதுள்ளத்தை விட்டகலாது.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"

உங்கள் பிரிவால் வாடும்!
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள், மருமக்கள்,
பெருமக்கள், நண்பர்கள்,
பேரப்பிள்ளைகள்: கிஷோர், விரேந்த்,
நிஷான், திலக், துளசி.

இராஜம் கொட்டேஜ்
செல்லாலை வீதி பண்டத்தரிப்பு. (8731)

ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான

# 5 நாள் சேவைக் காலப் பயிற்சி; ஏழு நிலையங்களில் நடத்தப்படும்

யாழ்ப்பாணம், ஜன 3
புதிதாக நியமனம் பெற்ற ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான ஐந்து நாள் சேவைக் காலப் பயிற்சியும் செயல் அமர்வும் இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகின்றன.

கடந்த செப்டம்பர் முதல் யாழ். மாவட்டத்தில் நியமிக்கப்பட்ட சகல ஆரம்ப ஆசிரியர்களுக்கும் இப் பயிற்சி நெறியை வழங்க யாழ் கல்வித் திணைக்களத்தின் பரீட்சைச் சபையினர் முன்வந்துள்ளனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது:-

இந்த ஐந்து தினங்களும் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை பயிற்சி நடைபெறும்.

புதிய ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தொடர்ந்து ஒரே நிலையத்திலேயே ஐந்து தினங்களும் பயிற்சி பெற வேண்டும்.

பயிற்சியில் பங்குபற்றுவதற்கெனக் கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படமாட்டது. ஆனால் இப் புதிய ஆசிரியர்களின் விசேட திறன்காண் பரீட்சைக்கு உதவக்கூடிய வகையில் இவர்களுக்கான சான்றிதழ் வழங்கப்படும்.

தற்சமயம் யாழ் மாவட்டத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ள எண்ணூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு இச் சேவைகாலப் பயிற்சி வகுப்புக்களை ஏழு நிலையங்களில் நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது.

1. அச்சுவேலி புனித தெரேசா மகா வித்தியாலயம்.
2. கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.
3. சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி.

இந்தப் பயிற்சி நிலையங்களில் இம்மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை பயிற்சி நடைபெறும்.

4. சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி
5. அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் வித்தியாலயம்.
6. அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.

இப் பயிற்சி நிலையங்களில் இம்மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை பயிற்சி நடைபெறும்.

7. வேலணை வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயம்.

இப் பயிற்சி நிலையத்தில் பெப்ரவரி 1 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை பயிற்சி நடைபெறும்.

(இ-118)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**திருமதி சிவஞானமணி தனராஜா**

எம்மை அன்பாகவும் பாசமாகவும் வளர்த்துவிட்டு எம்மை விட்டுப் பிரிந்து இன்று முப்பத்தொரு நாட்கள் சென்றாலும் எங்கள் மனதை விட்டு உங்கள் நினைவு நீங்காது. என்றும் உங்கள் அன்பிற்காக ஏங்கித் தவிக்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் ஈமச்சடங்கில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மற்றும் பல உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்.
கணவர், மக்கள், மருமக்கள்,
சகோதரி, பேரன்,

ம. தனராஜா
30, வீதாளை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (8563)

## ஈராண்டு நினைவஞ்சலி



**பஞ்சாட்சரம் சிவப்பிரகாசம் (கிச்சி)**

தோற்றம்: 11. 2. 1923
மறைவு: 3. 1. 1987
திதி: 11-01-89

அன்பின் இலக்கணமாய், பண்பின் பிறப்பிடமாய் எம் அனைவரின் நெஞ்சங்களிலும் நீங்காது நிறைந்திருக்கும் தங்கள் வாழ்வு ஒரு அமரகாவியம். இன்றுடன் இரண்டாண்டுகள் சென்றாலும் தங்கள் நினைவுஎன்றும் அகலாது.

உமது பிரிவால் வருந்தும்
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

உரும்பராய் கிழக்கு
உரும்பராய். (8702)

பட்டியல் வந்தும்

## பணம் வழங்கும் திகதி அறிவிக்கப்படவில்லை

வடமராட்சி, ஜன 3
நெல்லியடி மக்கள் வங்கியில் நிவாரணப் பணம் வழங்கப்படவில்லை

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான ரூபா 1000 நிவாரணப் பணம் நெல்லியடி மக்கள் வங்கிக் கிளைக்கு வந்து சேர்ந்துள்ளது.

ஆனால் இந்த நிவாரணப் பணக் கொடுப்பனவு திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

(இ-70)

## சனசமூக நிலையங்கள் ஒன்றியத்துடன் போரூட் இணைந்து செயற்படும்

யாழ்ப்பாணம் ஜன 3
எதிர்காலத்தில் "போரூட்" ஸ்தாபனமும், எமது ஒன்றியமும் இணைந்து பல திட்டங்களை யாழ் மாவட்டத்தில் செயற்படுத்தும்.

சனசமூக நிலையங்களின் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் "போரூட்" தலைமையகப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பின் போது ஒன்றியப் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இச் சந்திப்பு அண்மையில் யாழ். குானம்ஸ் ஹோட்டலில நடைபெற்றது

"போரூட்" பிரதிநிதிகள் சார்பில், இலங்கைக்கான போரூட் பிரதிநிதி திரு. ஆர். எரிக்சன், திரு. மரிக்கார், சுவீடன் நாட்டு நல்லொழுக்க வாலிபர் சங்கத் தலைவர் திரு. பீற்றர், செல்வி வி. மரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒன்றியச் செயலாளரினால் சனசமூக நிலையங்களின் நடவடிக்கைகள் பற்றிய ஆவணத்தொகுப்பு ஒன்றும் திரு எரிக்சனிடம் கையளிக்கப்பட்டது. (சி)

மக்கள் முகம்

### மக்கள் சுகாதாரக் குழு

அளவெட்டி தெற்கில் சுகாதாரக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவராக திரு. த. விசுவலிங்கம், செயலாளராக திருமதி நா. நடராசா ஆகியோரும் சுகாதாரப் பரிசோதகராக திரு. வீ. க. சிங்கராசா, குடும்ப நல சேவையாளராக திருமதி த. பரராசசிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்

குழுவில் 15 யுவதிகள் தொண்டர்களாகப்பணி புரிந்துவருகிறார்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**கா. சிறிகாந்தன் (சோபா)**


மலர்வு: 30 - 09 - 1969
உதிர்வு: 16 - 12 - 1987

எம்மவர்க்கு நீர் செய்த உதவிதனை நாம் எந்நாள் தான் மறந்திடலாம். சதிக்கும்பல்களின் சதிக்கு கொழும்பில் நீ பலியானாய். துள்ளித்திரியும் பள்ளி வயதினில் நீ எத்தனை கனவு கண்டிருப்பாய். உன் கனவு நனவாகும் நேரம் பாதியிலே முடிந்ததுவோ. சோபா! நீ எங்கே மறைந்து விட்டாய். இல்லை! இல்லை! எம்முடனே வாழ்கின்றாய்!- நீ சென்ற பாதைதனில் நீ புரிந்த செயல்களிலே நாம் உனை நிதம் காண்கின்றோம்.

அம்மா, பப்பா,
அக்கா, அண்ணா, மருமக்கள்.

சுழிபுரம். (8735)

## 60 ஆம் நாள் நினைவு அஞ்சலி



அமரர்
**சரவணமுத்து செல்வராஜா**
(மாமா)
(சாவகச்சேரி பிரபலவர்த்தகரும் சாவ/வர்த்தகர் சங்கச் செயலாளரும்)


மண் மகிழ: 25-11-1951
கண் கலங்க: 05-11-1988

வீட்டுக்கொளிதந்த விஞ்சு புகழ் ஒளி
விளக்கே!
நாட்டுக்குழைத்திட்ட நாயகனே!
வேட்டுக்கா
உயிர் கொடுத்தாய் உத்தமனே!
உன்னரிய புத்திரராம் பயிர் வளர
யாரினிமேல் காப்பு?

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

(8545)

## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**க. சந்திரதாசன் அவர்கள்**
(சுங்க இலாகா உத்தியோகஸ்த்தர்)

தோற்றம்: 10 - 01 - 1952
மறைவு: 06 - 01 - 1986

கடமைக்காய் காரில் சென்றீர் - சென்று
நீர் திரும்புகையில். காலனும்
கவர்ந்தனனே!
கல்மனமும் உருகும் கதை - காலத்தால்
அழியாதையா, கணமேனும் உமை
மறவோம்!

மனைவி - மகன்
தாய் - சகோதரங்கள்,
மாமி - மைத்துனர்கள்,
சுற்றத்தார் - நண்பர்கள்.

86/3, புகையிரத நிலைய முன்,
புங்கங்குளம்,
யாழ்ப்பாணம். (8554)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செலவம் உற்றக் கடை

**பொருள்:**
பேதை பெருஞ் செல்வம் அடைந்த போது (அவனோடு தொடர்பில்லாத) அயலார் நிறைய நன்மைபெற, அவனுடைய சுற்றத்தார் பசியால் வருந்துவர்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - ஐக்கியம்

இல: 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
03-01-1989   ச பெ இல 83


## புதிய ஜனாதிபதியின் வழி

இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று ஜனாதிபதியாக, திரு. ரணசிங்க பிரேமதாச நேற்றுச் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்றார்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற கண்டி எண்கோண மண்டபத்தில் இடம்பெற்ற மலர்ச்சியான பதவியேற்பு வைபவத்தின் பின்னர் திரு. பிரேமதாச நாட்டு மக்களுக்கு உரை ஆற்றினார்.

உரையை முற்றாகத் தமிழில் வாசிக்கவில்லையாயினும் மும்மொழிகளிலும் அவர் பேசினார்.

தமிழ் மக்களின் பிரச்சினை உட்பட அவர் எந்த விடயம் குறித்தும் தனித்துவப்படுத்திப் பேசவில்லை. ஆனால் தொட வேண்டிய அம்சங்களை எல்லாம் தொட்டு பொதுப்படையாக உரை நிகழ்த்தினார்.

ஒட்டு மொத்தத்தில் பார்த்தால் அவரது உரை கட்டியானதாகவும், கேட்பதற்குக் காத்திரமானதாகவும், கருத்துள்ளதாகவும், காலத்துக்கு ஏற்றதாகவும் இருந்தது.

நாட்டின், அரசியலின், மக்களின் பல வினங்களைச் சுட்டிக் காட்டினார். அவற்றை நீக்க வேண்டியதன் அவசியத்தை, நீக்குவதற்கான வழிமுறைகள் என்பனவற்றை எடுத்துக் கூறினார்.

நாட்டின் பாதுகாப்பு, அரசியல், நிர்வாகம், பொருளாதாரம், கல்வி, வெளிநாட்டு உறவு என்பன உட்பட முக்கிய விவகாரங்களில் தாம் எவ்வாறான மாற்றங்களைக் கொண்டு வர உத்தேசித்திருக்கிறார் என்பதைக் கோடிட்டுக் காட்டினார்.

புதிய யுகம் ஒன்றை நோக்கி, பொன் யுகம் ஒன்றைக் காண்பதற்காக, தான், மக்களை எவ்வழிகளில் நடத்த எண்ணியுள்ளார் என்பதையும் அவர் எடுத்துரைத்தார்.

கூட்டிப் பார்த்தால் நன்றாக வகுக்கப்பட்டு, ஆக்கப்பட்ட பேச்சு.

பேசுவது இலகு. செயலாக்குவது தான் சிரமம். பேச்சைச் செயலாக்குவதற்கு உழைப்பும், திறமையும், திடசிந்தையும் அவசியம் தடைகளையும், தடங்கல்களையும், எதிர்ப்புகளையும் சமாளித்து எதிர்நீச்சல் அடிக்கும் துணிவும் தேவை.

எவ்வாறாயினும் புதிய ஜனாதிபதி கூறிய பின்வரும் விடயங்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவை:

- ★ ஜனநாயக வழிக்கு அப்பால் நிற்பவர்களை அந்த வழிக்கு வருமாறு அழைக்கிறேன். அது கருதி ஆக்கபூர்வமான பேச்சுக்களை எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் நடத்துவதற்குத் தயார். அதற்குரிய பாதுகாப்பையும், பந்தோபஸ்தையும் ஏற்படுசெய்யவும் தயார்.
- ★ எங்களுக்குள் நிலவும் பிரச்சினைகளை வெளியார் தலையீட்டுக்கு இடம் வைக்காமல் நாமே தீர்த்துக் கொள்ள வேண்டும். பேச்சுவார்த்தை, கருத்தொருமித்தல், இணக்கம் என்ற அடிப்படையில் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.
- ★ மக்களில் ஒரு சாரார் தொடர்ந்து வசதியில்லாதவர்களாகவும், மறுசாரார் தொடர்ந்து வசதிமிக்கவர்களாகவும் உள்ள நிலை மாற்றப்பட வேண்டும்.
- ★ ஒற்றுமைக்கும் இணக்கத்துக்கும், அமைதிக்கும் சமாதானத்துக்கும், ஒழுங்கு நிலைக்கும் ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்கும் மக்களை வழி நடத்திச் செல்வேன்.
- ★ பாதுகாப்புக்குச் செலவிடப்படும் பணம் எமது மூலவளங்களை அபிவிருத்தி செய்து மக்களுக்கு வாழ்வளிக்க வகை செய்யப்பட வேண்டும்.
- ★ வெளிநாட்டு உதவிகளில் தங்கியிருந்து எமது சுதந்திரத்தைப் பாதிக்க இடம் கொடுக்கலாகாது.
- ★ வேற்றுமையில் ஒற்றுமை கண்டு, சமாதான சகவாழ்வுக்கு வழிசெய்யக் கூடிய ஒழுக்கக் கட்டுப்பாட்டை நிலைநிறுத்தும் கல்வி முறை வேண்டும்.
- ★ பொற்காலம் ஒன்றை உருவாக்க, மக்கள் யுகம் ஒன்றை உருவாக்க என்னை அர்ப்பணித்து உழைப்பேன்.

இவை யாவும் சொல்லில் இல்லாமல் செயலில் நடந்தால் இலங்கை மக்கள் அதிஷ்டம் செய்தவர்களாக மாறுவார்கள். அப்படியே ஆகுமா?

## 15மீற்றர் நீள புதுவருட வாழ்த்து

மாஸ்கோ, ஜன 2

15 மீற்றர் நீளமுள்ள புத்தாண்டு வாழ்த்து அட்டை நேற்று மாஸ்கோ போய்ச் சேர்ந்தது.

இதில் 25 ஆயிரம் பேர் கையெழுத்திட்டிருந்தனர்.

புதுவருடத்தில் கிழக்கு - மேற்கு உறவுகள் மேலும் வளர வேண்டும் என்று இவ் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதிபர் கோர்பச்சேவுக்கும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டிருந்தது. (எ)

தாயகம் மீட்கும் கிளர்ச்சியை அடக்க

# கண்கள் கட்டப்பட்ட நிலையில் பதின்மூன்று பலஸ்தீனியர் நாடுகடத்தல்!

## இஸ்ரவேலின் அடக்குமுறை தீவிரமடைகின்றது

ஜெருசலம், ஜன 2

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் இருந்து பலஸ்தீனியரை இஸ்ரவேல் அரசு தொடர்ந்து நாடுகடத்தி வருகிறது.

கடந்த ஒரு வருடகாலமாக பலஸ்தீனியர் நடத்தும் தாயகம் மீட்கும் கிளர்ச்சியை நடத்தும் முக்கியஸ்தர்கள் என்று கூறி இந்த நாடு கடத்தலை ஜெருசலம் அரசு நடத்தி வருகிறது.

நேற்று 13 பலஸ்தீனியரை இஸ்ரவேல் அதிகாரிகள் விமானம் ஒன்றில் தென் லெபனனில் இஸ்ரவேலின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிக்கு அனுப்பி வைத்தனர்.

விமானத்தில் ஏற்றுவதற்கு முன்னர் அந்த 13 பேரும் கண்கள் கட்டப்பட்ட நிலையில் விமான நிலையம்கொண்டு வரப்பட்டனர்.

அதேவேளை—

இரண்டு பலஸ்தீனியர்கள் தாங்களாகவே நாட்டைவிட்டு வெளியேறிச் செல்வதாக இஸ்ரவேல் அரசுக்கு அறிவித்தனர்.

தாயகம் மீட்கும் கிளர்ச்சி ஆரம்பித்த ஒரு வருடத்தில் 50 பலஸ்தீனியரை இஸ்ரவேல் நாடு கடத்தியிருக்கிறது.

இதனிடையில் காஸா பகுதியில் முழுநேர ஊரடங்குச் சட்டத்தை இஸ்ரவேல் பிறப்பித்திருக்கின்றது. தேடுதல் பணியிலும் படையினர் ஈடுபடுத்தப்பட்டனர். [எ]

இந்திய அரசியல்வாதிகளின்

## சுவிஸ் வங்கிக் கணக்கு விவரங்கள் பொங்கலன்று வெளியிடப்படும்!

### டாக்டர் சுப்பிரமணிய சுவாமி பகிரங்க அறிவித்தல்

சுவிஸ் வங்கி மற்றும் வெளிநாட்டு வங்கிகளில் இரகசியக் கணக்குவைத்திருக்கும் இந்திய அரசியல் தலைவர்கள், பிரமுகர்களின் பெயர்களை பொங்கல் தினத்தன்று வெளியிடப்போவதாக ஜனதாதக் கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்தார்.

பெங்களூரில் செய்தியாளர் மத்தியில் பேசிய டாக்டர் சுவாமி மேலும் சொன்னதாவது;

இரகசியக் கணக்கு

இலக்கம் விவரங்களையும் உடனடியாக வெளியிட முடியாது.

இவ் விவரங்களை எல்லாம் வரும் பொங்கல் தினத்தன்று வெளியிடப் போகுறேன்.

நான் சொல்லப் போகும் நபர்களில் யாராவது தாம் அப்படி ரகசிய கணக்கு வைத்திருக்கவில்லை என்று மறுப்புக் கூறுவார்களானால் அந்தக் கணக்குகளை என் பெயருக்கு மாற்றும்படி கூறுவேன்.

வெளிநாடுகளில் பதுக்கல் பணம் வைத்திருப்பவர்களில் எதிர்க்கட்சி தலைவர்களும் உள்ளனர்.

இரண்டு சுவிஸ் வங்கிகளின் அதிகாரிகளுடன் நான் சமீபத்தில் பேசினேன். இந்திய அரசைச் சேர்ந்தவர்களுடனும் வெளிநாட்டு வட்டாரங்களுடனும் நான் பேசினேன். இவற்றின் பலனாக பதுக்கல் பணம் பற்றிய ரகசிய கணக்குகள் குறித்து தகவல்களை என்னால் சேகரிக்க முடிந்தது.

இந்தியப் பணத்தில் 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு பணம் வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைத்திருப்பது தெரியவந்தது.

இவர்களின் பெயர்கள் மற்றும் வங்கிக் கணக்கு சட்டவிரோதமாக வெளிநாட்டில் கணக்கு வைத்திருக்கும் பிரச்சினையை, பிரதமர் காந்திக்கு எதிரான ஒரு தேர்தல் பிரச்சினையாக்க முயற்சித்தால் எங்கள் ஜனதா தள் கட்சியிலேயே முக்கிய பிரமுகர்கள் ரகசிய கணக்கு வைத்திருப்பதும் அம்பலமாகும்.

வி.பி. சிங்குக்கு சுவிஸ் வங்கியில் இரகசிய கணக்கு இருப்பது எனக்குத் தெரியும்.

இப்படி டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்தார். (எ)

# நான்கு முனைப்போட்டியிலும் நானே வெற்றி அடைவேன்!

## ஜெயலலிதா கூறுகின்றார்

சென்னை ஜன 2

நான்கு முனைப்போட்டியிலும் நானே வெற்றி பெற்று கோட்டையில் ஆட்சி அமைப்பேன்.

அ.தி.மு.க. (ஜெ) அணிப் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா எம்பி முன்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழக சட்டசபைக்கு இம் மாதம் 21ஆம் திகதி தேர்தல் நடக்கிறது.

இதில் காங்கிரஸ், தி.மு.க, அ.தி.மு.க, ஜானகி அணி, அ.தி.மு.க ஜெயலலிதா அணி ஆகியன போட்டியிடுகின்றன.

இதனால் நான்கு முனைப்போட்டி ஏற்பட்டு உள்ளது.

தேர்தல் வெற்றி வாய்ப்புப் பற்றி ஜெயலலிதா சொன்னதாவது;

பல முனைப்போட்டி ஏற்பட்டாலும் எங்கள் கட்சிக்கே அதிக வெற்றி வாய்ப்பு இருக்கிறது.

1984 தேர்தலில் பதிவான வாக்குகளைப் பார்த்தால் தி.மு.கவுக்கு வெற்றி வாய்ப்பு இருப்பது போலத் தோன்றும்.



ஜெயலலிதா

ஆனால் படித்தவர்களும் கிராமப் பகுதிகளில் இருப்பவர்களும் எங்களையே ஆதரிக்கின்றனர்.

இத் தேர்தலில் முதல் எதிரி தி.மு.க. தான். எம்.ஜி.ஆர் மறைந்த போது மக்களின் மனதில் தடுமாற்றம் இருந்தது. ஆனால் இப்போது பெரும்பான்மையான தொண்டர்கள் எங்கள் பக்கம் இருக்கிறார்கள்.

என்னை நான் எம்.ஜி.ஆர். வாரிசாக கருதவில்லை மக்கள் தான் என்னை எம்.ஜி.ஆர். வாரிசாகக் கருதுகிறார்கள்.

யாரும் யாருடைய நகலாக இருக்க முடியாது.

அண்ணாவை தனது வழிகாட்டியாக எம்.ஜி.ஆர் அறிவித்தார். அதே போலத் தான் நானும் எம்.ஜி.ஆரை வழிகாட்டியாக கருதுகிறேன்.

இப்படி செல்வி ஜெயலலிதா சொன்னார்.

## எல்சல்வடோரில் மனித உரிமை மீறல்

எல்சல்வடோரில் மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

ரோமன் தேவாலயத்தின் தலைவர் இதனை வெளியிட்டார்.

கடந்த ஆண்டு 190 குடிமக்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் 75 சதவீதமானோர் அரசபடைகளினாலும் வலது சாரி கொலைப் படையினாலும் கொல்லப்பட்டனர்.

எஞ்சியோர் இடதுசாரிக் கெரில்லாக்களினால் கொல்லப்பட்டனர்.

1987 இலும் பார்க்க 1988 இல் கொல்லப்பட்ட குடிமக்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது. (எ)

## 15 பேர் பலி!

சென்பாலோ, ஜன 2

சிலியில் இளம் குற்றவாளிகள் சிறை ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் 15 கைதிகள் உயிரிழந்தனர். 5 பேர் காயமடைந்தனர்.

இளம் குற்றவாளிகள் சிலர் தப்பி ஓடும் முயற்சியாகவே சிறைக்குத் தீ வைத்தனர் என்றும்.

18 கைதிகள் தப்பிச் [illegible] என்றும் அறிவிக்கப் [illegible]

## தனிக் கட்சியை அமைத்தார் "பண்ருட்டி"

சென்னை, ஜன. 02

அ.தி.மு.க. நாவலர் அணியில் இருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் தனிக் கட்சி தொடங்கி இருக்கிறார்.

தனது ஆதரவாளர்கள் யாரும் நெடுஞ்செழியன் அணியுடன் தொடர்பு கொள்ளவேண்டாம் என்று அவர் கோரியுள்ளார்.

பண்ருட்டி இராமச்சந்திரனை நாவலர் அணியிலிருந்து வெளியேற்றி [illegible] ஆர். மறைவின் பின்னர் அ.தி.மு.க, ஜானகி அணி, ஜெயலலிதா அணி என்று இரண்டாகப் பிரிந்தது.

அப்போது பண்ருட்டி இராமச்சந்திரன் ஜெயலலிதா அணியில் இருந்தார்.

பின்னர் ஜெயலலிதா அணியில் இருந்து நாவலர் தலைமையில் ஓர் அணிஉருவானது. அந்த நாவலர் அணியில் பன்னர் 'பண்ருட்டி' இருந்தார். இப்போது 'பண்ருட்டி' தனி அணி ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்.

# பதவி விலக மாட்டேன்! ஆப்கன் அதிபர் அறிவிப்பு

காபூல் ஜன 2

பதவி விலகப்போவது இல்லை என ஆப்கன் அதிபர் டாக்டர் நஜிபுல்லா நேற்று அறிவித்தார்.

டெலிவிஷனில் நேற்று டாக்டர் நஜிப் உரை நிகழ்த்தினார்.

அப்போது அவர் மேலும்சொன்னதாவது:

அமைதியை நிலைநாட்டவும் சகல தரப்பினரும் அங்கம் வகிக்கும் அரசு ஒன்றை நிறுவவும் எதிர்க் கட்சிக் குழுக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

அந்த அரசில் எனது கட்சியும் இடம் பெற வேண்டும். எதிர்க் குழுக்கள் கோரிக்கைக்கு இணங்க நான் ஜனாதிபதி பதவியில் இருந்து விலக மாட்டேன்.

இப்படி அதிபர் தெரிவித்தார்.

இதனிடையில் ஆப்கன்-சோவியத் அரசுகள் அறிவித்த யுத்த நிறுத்தம் முதல் நாளே முறிவடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

அரசப்படைமுகாம்மீது கெரில்லாக்கள் நடத்திய தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவும் அதில் பல கெரில்லாக்கள் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

பிரிட்டனில்

## மகாராணி ஆட்சி போதும்; மன்னர் ஆட்சி வேண்டும்!

இரண்டாவது எலிஸபத் மகாராணி பதவி விலகி சார்ள்ஸ் இளவரசர் மன்னராக இடமளிக்க வேண்டு. என்று பிரிட்டிஷ் மக்களில் பெரும்பாலானோர் கருதுகின்றனர்.

லண்டன் டெய்லி டெலிகிராப் பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பில் இது தெரிய வந்தது.

கருத்துக் கணிப்பின்படி 59 சதவீதமானோர் சார்ள்ஸ் இளவரசர் மன்னராக வேண்டும் என்று விருப்பம் தெரிவித்திருக்கின்றனர்.

82 சதவீதமானோர் பிரிட்டனில் முடியாட்சி தொடர்ந்து இருப்பதை விரும்புகின்றனர் என்றும் அக்கருத்துக் கணிப்பில் தெரியவந்திருக்கிறது. (எ)

### நல்லொழுக்கக் கோவை

டோக்கியோ, ஜன. 2

ஜப்பானில் அரசியல்வாதிகளுக்கு நல்லொழுக்கக் கோவை ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

ஜப்பானியப் பிரதமர் தகாஷிவோ இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

ஊழல் குற்றச்சாட்டுக்கள் காரணமாக கடந்த இரண்டு மாதங்களில் இரண்டு அமைச்சர்கள் இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்தே நல்லொழுக்கக்கோவை தயாரிக்கப்படுவதாக அவர் கூறினார்.

### 21பேர் மரணம்

அடிஸ் அபாபா, ஜன. 2

பெட்ரோல் ஏற்றி வந்த லொறி ஒன்று எத்தியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபாவில் விபத்துக்குள்ளானதில் 21பேர் உயிரிழந்தனர்.

லொறி தலைகுப்புறப் புரண்டதில், பெட்ரோல் வீதிவழியாக ஓடி அரசு அலுவலகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்குள் புகுந்து கொண்டது.

அதனால் கடைகள், அலுவலகங்கள் தீப்பற்றி எரிந்தன. [எ]

# பிரெஞ்சுபுரட்சியின் 200ஆம் ஆண்டுவிழா பாரிஸில் கோலாகலமாக ஆரம்பம்

பிரெஞ்சுப் புரட்சியின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழா பாரிஸில் நேற்று ஆரம்பமானது.

90 நகரங்களில் இருந்து கண்கவர் பலூன்கள் நேற்று பறக்கவிடப்பட்டன.

18 ஆம் ஆண்டு உடை அணிந்தவர்களே இப் பலூன்களைப் பறக்கவிட்டனர்.

1789 இல் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் பிரகடனத்தின் பிரதிகள் இப் பலூன்களில் கட்டப்பட்டிருந்தன.

இப் பிரகடனம்தான் பின்னர் பிரெஞ்சு அரசமைப்புச் சட்டத்தில் இணைக்கப்பட்டது.

பிரெஞ்சுப் புரட்சியின் முக்கிய கொண்டாட்டம் வருகிற ஜூலை 14 ஆம் திகதி இடம் பெறும்.

அன்று 10 ஆயிரம்பேர் பாஸ்டீல் சிறை உடைப்பை நினைவு படுத்து முகமாக அணிவகுத்துச் செல்வர். (எ)

# ஜானகி அணியுடன் இணைய 5கோடிரூபா பேரம் பேசியவர் ஜெயலலிதா

## காளிமுத்து அறிவிப்பு

சென்னை, ஜன. 2

'ஜானகி அம்மாள் அணியுடன் இணைய ஜெயலலிதா ரூ. 5கோடி கேட்டுப் பேரம் பேசினார்' என்று முன்னாள் அமைச்சர் காளிமுத்து கூறினார்.

அவர் ஓர் அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

காங்கிரஸை சவாரிக் குதிரையாக்கிக்கொண்டு ஜெயலலிதா கோட்டையில் நுழைந்துவிடப் பார்த்தார், முயன்றார். எங்கெங்கோ தூது விட்டார். அவ்வளவு சாகச அம்புகளையும் பயன்படுத்திப் பார்த்தார். காங்கிரஸைக் கவர என்னென்ன மேனகை ஆட்டம் ஆடவேண்டுமோ ஆடிப்பார்த்தார் முடியவில்லை.

எந்த அன்னையை நாக்கில் சகதி தடவிக் கொண்டு பேசினாரோ, அந்த அன்னையின் கட்சியோடு இணையக்கூடும் என்று திருநெல்வேலியில் ஜெயலலிதா திடீர் பேட்டி அளித்தார்.

ஜெயலலிதா கட்சியில் உள்ள சில அரசியல் கரும்புள்ளிகள், ஜெயலலிதா சார்பில் நம்மோடு பேச்சு நடத்த முயன்றார்கள்.

### தமிழ்நாடு தேர்தல்களம்

பழைய பாவத்துக்காக வலிய வருபவர்களிடம் பேசுவதால் என்ன கெட்டுப்போகப் போகிறது என்று எண்ணி நமது இயக்கத்தைச் சேர்ந்த முன்வணித் தலைவர்கள் இருவர் அவர்களோடு பேசினர்.

ஆனால் ஜெயலலிதாவின் இணைப்பு எனும் நஞ்சுக்கருத்தை ஆரம்பத்திலேயே அன்னை ஜானகி அம்மாள் அடியோடு மறுத்துவிட்டார்.

அதைப் பற்றியே பேசாதீர்கள் என்றும் கட்டளையிட்டார்.

வலியவந்து நமது தலைவர்களிடம் பேசவந்தது ஜெயலலிதா கும்பலின் கையாட்கள் தாம்! நாம் எவரையும் வழிமறித்து வரம் கேட்கவில்லை.

அன்னை ஜானகி எம்.ஜி. ஆரைத் தலைவராக ஏற்றுக்கொண்டு ஜெயலலிதா இணைந்து விடுவாராம்; அதற்கு அவர் பேசிய பேரத்தொகை எவ்வளவு தெரியுமா? ஐந்து கோடி ரூபாய்.

ஐந்து இலட்சம் தந்து நாடாளுமன்ற உறுப்பினர் தங்கராஜை விலைக்கு வாங்க முயன்றவர்கள் இப்போது தங்களுக்கு 5கோடி என விலை நிர்ணயிக்கிறார்கள்.

5 கோடி ரூபாய்க்கு அன்னை ஜானகி எம்.ஜி ஆரின் பாதம் பணிகின்றேன் எனத் தூதுவிட்ட ஜெயலலிதா கேடியை அவர்களே நயகருக் கொட்டிக்கொடுத்து இங்கே வருவதாக இருந்தாலும் அன்னை ஒப்பவில்லை'.

இவ்வாறு காளிமுத்து கூறியுள்ளார். (எ 4)

### அமெரிக்காவின் ஆபிரிக்கக் கொள்கை

லேகேஸ், ஜன 2

ஐந்து நாடுகள் பயணம் ஒன்றை மேற்கொண்டு உள்ள அமெரிக்க ஜனநாயகக் கட்சி பிரமுகர் ஜெஸி ஜக்ஸன் இரண்டாம் கட்டமாக நேற்று நைஜீரியாவைச் சேர்ந்தார்.

அங்கு செய்தியாளர் மத்தியில் பேசுகையில் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்கவிருக்கும் திரு. ஜோர்ஜ் புஷ் அமெரிக்க ஆபிரிக்கக் கொள்கையில் மாற்றம் செய்ய வேண்டும்என்று கேட்டுக் கொண்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



★ ஜோன்சன்
வெளியிணை இயந்திரங்கள்
உதிரிப்பாகங்கள்
வலை, நூல், போயா
றோலர் மடிநூல், வகைகளை
பெற்றுக்கொள்ள

சென். அன்ரனீஸ்,
63, யூதாததேயு வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.



# உதயன்

03 · 01 · 1989 செவ்வாய்க்கிழமை



வடபகுதி கடற்றொழிலாளர் கவனத்திற்கு!
எம்மிடம்
ஜோண்சன் ★ JOHNSON
வெளியிணை இயந்திரங்கள்
உதிரிப்பாகங்களுடன்
றோலர் மடிநூல் ½ மில்லி மீற்றர் வலை,
நூல், போயா போன்ற கடற்றொழில்
உபகரணங்களையும் மலிவு விலையில்
வாங்கலாம்

சென். அன்ரனீஸ்
40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.


### திறைசேரிக்கு நிதி திரும்பும் நிலை தவிர்க்கப்பட்டது

# ஒன்றரை லட்சம் பேருக்கு 15 கோடி ரூபா நிவாரணம்!

### யாழ் செயலகத்தினுல் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம் ஜன 3

யாழ் மாவட்டத்தில் மீளக்குடியமர்தல் நிவாரணத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 15 கோடி ரூபாவும் சம்பந்தப்பட்ட ஒன்றரை லட்சம் குடும்பங்களுக்கு வழங்குவதற்காக வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டன.

நிவாரணம் பெறுவோருக்கு விநியோகிப்பதற்காக சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு கடந்த டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் இந்நிதி அனுப்பப்பட்டிருக்காவிட்டால்-

எஞ்சிய நிதியை திறைசேரி திரும்பப் பெறக்கூடிய ஓர் இக்கட்டான நிலை கடந்த மாதத்தில் உருவாகியிருந்தது-

எனினும் யாழ் அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் எடுத்த உடனடி நடவடிக்கைகளினாலும் யாழ் செயலக ஊழியர்களின் துரித செயற்பட்டினாலும் இந்நிதி திறைசேரிக்கு திரும்பிச் செல்லும் நிலை தவிர்க்கப்பட்டிருக்கிறது.

நிவாரணம் வழங்கப்பட வேண்டிய குடும்பங்களின் பட்டியலுடன் அதற்கான நிதியும் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டிருப்பதால் காலக்கிரமத்தில் வங்கிகள் அப்பணத்தை உரியவர்களுக்கு வழங்கும் என்றும்-

திறைசேரி நிதியைத் திரும்பப் பெறும் நிலை தவிர்க்கப்பட்டு விட்டது என்றும் யாழ் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே சமயம் கடந்த வருடம் தொழில் வாய்ப்புகளை ஆரம்பிப்பதற்காக ஆயிரத்து 397 விவசாயிகளுக்கும் 2 ஆயிரத்து 237 மீனவர்களுக்கும் யாழ் செயலகத்தினூடாக உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. (உ-5)

### புதுக்குடியிருப்பில் கலெக்டர் ஆபிஸ்!

ஒட்டுசுட்டான், ஜன 3

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் முன்புறத்தில் நாட்டப்பட்டிருக்கும் பெயர்ப் பலகையில் தற்போது 'கலெக்டர் ஆபிஸ்' என தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கிறது.

முன்னர் இப்பெயர்ப் பலகையில் உதவி அரசாங்க அதிபர் பணிமனை என்று மட்டுமே எழுதப்பட்டிருந்தது. (உ-113)

## காங்கேசன் இ. வங்கியில் கிழமை நாட்களிலும் நிவாரணம்

### இன்று தையிட்டிப் பகுதிக்கு

யாழ்ப்பாணம் ஜன 3

காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளையில் கிழமை நாட்களிலும் மீளக்குடியமர்தலுக்கான நிவாரணப் பணம் வழங்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம் இன்று மூன்றும் திகதி தையிட்டிப் பகுதியைச் சேர்ந்த 148 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

நாளை நான்காம் திகதி மயிலிட்டி தெற்குப்பகுதியைச் சேர்ந்த 134 குடும்பங்களுக்கும்—

நாளை மறுதினம் ஐந்தாம் திகதி தெல்லிப்பழை வடமேற்குப் பகுதியைச் சேர்ந்த 67 குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்படும்.

இதேவேளை இந்த மூன்று பகுதிகளையும் சேர்ந்த 370 குடும்பங்களின் நிவாரப்பணம் வங்கியில் தொடர்ந்தும் தேங்கிக் கிடைப்பதாகவும் அதனைச் சம்பந்தப்பட்டவர்கள் மேற்சொன்ன திகதிகளில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-10)

## உள்ளூராட்சி திணைக்களம் இல்லாமல் போகும்

கொழும்பு, ஜன 3

உள்ளூராட்சித்திணைக்களம் ஒழிக்கப்படும் என்று அறியப்படுகிறது.

மாகாணசபைகள் மூலமான நிர்வாகத்துடன் உள்ளூராட்சி நிர்வாகம் பரவலாக்கப்படும் என்றும்—

இதனால் உள்ளூராட்சித் திணைக்களது தின் செயற்பாடுகளும் பரவலாக்கப்பட்டு, உள்ளூராட்சித் திணைக்கள சேவையில் உள்ள ஊழியர்கள் மாகாணசபைக்குட்பட்ட ஊழியர்களாக்கப்படுவர் என்று தெரிகிறது.

மாகாணசபைகளின் சேவைக்குக் கீழ்வராத உள்ளூராட்சித் திணைக்கள ஊழியர்கள் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் கொண்டுவரப்படுவர் என்றும் கூறப்படுகிறது (உ-எ)

### எமது பிரச்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சனங்களை மனமுவந்து ஏற்றுக்கொள்வேன். நான் எனது அரசியல் வாழ்வில் பெரும் பகுதியை எதிர்க் கட்சியில் தான் கழித்துள்ளேன்

★ தோல்வியில் ஏற்படும் மனவேதனையால் விபரீதமான செயல்களில் ஈடுபடுவது முறையாகாது. அச்சுறுத்தல்களைச் செய்ய அது ஒரு அனுமதிப்பத்திரமாக அமையாது.

★ ஜனநாயக செயல் முறையில் இதுவரை சேராமல் இருப்பவர்களிடம் ஜனநாயக வழிக்கு வாருங்கள் என மீண்டும் ஒருமுறை அழைக்கிறேன்.

ஆக்கபூர்வமான முடிவுக்கு வரும் எவ்வித பேச்சுக்களுக்கும் நாம் தயார். அதற்கு வேண்டிய பந்தோபஸ்து யாவற்றையும் நான் செய்து கொடுப்பேன்.

★ ஒற்றுமைக்கும், இணக்கத்துக்கும், அமைதிக்கும், சமாதானத்துக்கும், ஒழுங்கு நிலைக்கும், ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்கும் மக்களை வழி நடத்திச் செல்வேன்.

★ பாதுகாப்புக்குச் செலவிடப்படும் பணம் எமது மூல வளங்களை அபிவிருத்தி செய்து மக்களுக்கு வாழ்வளிக்க வகை செய்யவேண்டும்.

★ வெளிநாட்டு உதவிகளில் தங்கியிருந்து எமது சுதந்திரத்தைப் பாதிக்க இடம்கொடுத்தலாகாது

★ நான் பாடசாலை சென்ற காலத்தில் எனது வகுப்பறையில் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் இனங்களைச் சேர்ந்த பிள்ளைகள் ஒரு வாங்கில் அமர்ந்து பயின்றூர்கள். எத்துணை அருமையான சக வாழ்வை நாம் அதனால் அனுபவித்தோம். ஆனால் அதற்குப் பின்னால் பொறுப்புணர்ச்சியற்றவர்களின் செயல்களினால் நம் மத்தியில் பிளவுகள் ஏற்பட்டன. நமது சக வாழ்வுக்கும் ஒற்றுமைக்கும் துணை நிற்கும் வகையில் நமது கல்வி முறையை மற்றிக்கொள்ள வேண்டும்.

★ நமது வெளிநாட்டுக் கொள்கையில் தன்ஞதிக்கத்தை நாம் தொடர்ந்து பேணிக்கொள்ள வேண்டும்.

★ ஒரு நாடு மற்ற நாட்டில் தலையிடாத அடிப்படையிலான அணிசேராக் கோட்பாட்டில் தான் சக நாடுகளின் உறவுகள் பேணப்பட வேண்டும் இந்தக் கோட்பாட்டைப் பேணுவதற்கு நாம் நமக்குள்ளே நிலவும் சச்சரவுகளையும் பிணக்குகளையும் நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும். வெளிநாடுகளின் தலையீடுகள் ஏற்படா வண்ணம்,

அத்தகைய தலையீடுகளுக்கு சந்தர்ப்பம் வாய்க்காத வண்ணம் நமது உள்நாட்டுப் பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும்.

எது எப்படியாயினும் நான் ஒன்றை மட்டும் சொல்லியாக வேண்டும்.

எவ்வித தியாகத்தைப் புரிந்தாவது எனது தாய் நாட்டின் ஓர் அங்குல நிலத்தையாவது எவருக்குமே தாரை வார்த்துக் கொடுக்க மாட்டேன் என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

எவரையும் தோற்கடிப்பது எனது நோக்கமல்ல; அனைவரையும் வெற்றி பெறச் செய்வதுதான் எனது நோக்கம்.

தோல்வி அடையச் செய்வது எளிதானது. வெற்றிபெறச் செய்வது அவ்வளவு எளிதானதல்ல. (அ-எ-ஓ)

### கூட்டுத்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போனதைத் தொடர்ந்தே ஈரோஸ் தனித்து சுயேச்சையாகப்போட்டியிடும் நிலைமை உருவாகி இருக்கிறது என்று தெரியவருகிறது,

கொழும்பில் நடத்தப்பட்ட பேச்சுக்கள் எதிர்பார்த்த பலனை அளிக்காத போதிலும்தொடர்ந்து இது தொடர்பான முயற்சியில் ஈரோஸ் ஈடுபடுமென்று ஈரோஸ் வட்டாரங்கள் நேற்றுக் கருத்துத் தெரிவித்தன.

பெரும்பாலான அரசியல் கட்சிகள், குழுக்கள் இப்பேச்சுவார்த்தையின்போது கூடிய ஆசனங்களைப் பெறுவதிலேயே நாட்டம் செலுத்தியதாகவும் ஓர் கூட்டுத் தலைமைத்துவத்தை உருவாக்குவதற்கான அவசியத்தை அவை உணரத் தவறியிருந்தன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஈரோஸ் அமைப்பின் அரசியல் கட்சியான ஈழவர் ஜனநாயக முன்னணி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாகப் போட்டியிட விண்ணப்பித்திருந்ததும்—

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் காலம் பிந்தியதால் அங்கீகாரம் வழங்கப்படாதநிலை உருவானதும் தெரிந்ததே.

இதனை அடுத்தே ஈரோஸ் சுயேச்சையாகப் போட்டியிடும் நிலைமை உருவாகி இருக்கிறது. (அ-இ)

### விட்டுக்கொடுக்க...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நலன் கருதி நாம் விட்டுக்கொடுக்க தயாராகவுள்ளோம். ஆனால் எமது நிலை நியாய பூர்வமாக மதிக்கப்படல்வேண்டும்.

தேர்தலில் ஓரே அணியில் போட்டியிடுவதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன. இப்பேச்சுவார்த்தை வெற்றி பெறும் என்ற நம்பிக்கை உண்டு—என்றூர். (உ-21)

### திரளான மக்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனர்.

பிரதம நீதியரசர் திரு. பரிந்தா ரணசிங்கவும் மேடைக்கு வந்தார். திரு. பிரேமதாச உறுதி மொழியை பிரதம நீதியரசர் முன்னிலையில் வாசித்துப் பின்னர் அதில் ஒப்பமிட்டார்.

அதன் பின்னர் அவர் நாட்டு மக்களுக்கு உரையாற்றினர். முதலில் சிங்களத்தில் பேசிய திரு. பிரேமதாச அடுத்துத் தமிழில் சில நிமிடங்கள் பேசினர். அதை அடுத்து அவரது உரை தமிழில் வாசிக்கப்பட்டது. தொடர்ந்து திரு. பிரேமதாச ஆங்கிலத்தில் பேசினர்.

அடுத்து புதிய ஜனதிபதியும், பாரியாரும் தலதா மாளிகையின் பெயர் ஏட்டில் ஒப்பமிட்டனர்.

ஜனதிபதியும் அவரது குடும்பத்தினரும் சமாதான வேண்டுதலுக்கு அறிகுறியாக வெண்புறுக்களைப் பறக்கவிட்டனர்

அதன் பின்னர் ஜனதிபதி முப்படைத் தளபதிகள் சகிதம் சென்று அணிவகுப்பு மரியாதையைப் பார்வையிட்டார்.

நேற்றைய வைபவத்தில் அமைச்சர்கள் காமினி திசநாயக்கா, ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ், எம்.எச்.முகம்மது, இராசதுரை, ஹமீத் உட்பட பலர் கலந்து கொண்டனர். திரு அத்துலத் முதலி கலந்து கொள்ளவில்லை. (அ)

### சர்வசன..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய திகதி (ஜூலை 5) யை அவர் என்னிடம் சொல்லவில்லை.

இது தமிழரிடையே பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. காரணம் வடகிழக்குமாகாணசபைஇயங்க ஒப்பந்தப்படி ஒரு வருடகாலம் வழங்கப்படவில்லை என்பதே.

இப்பிரச்சினை பற்றி இலங்கை அரசுடன் பேசப்பட்டது. அதற்கு தரை நிலைமையை கருத்திற் கொண்டு திகதி மீளாய்வு செய்யப்படும் என இந்தியாவுக்கு உறுதி அளிக்கப்பட்டது என்றூர். (உ-எ)

### பொதுத் தேர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டம் காலாவதியாக முன்னர் மறைவிலிருந்து வெளியே வந்து வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தால், அவ்வேளையில் அவசரகால சட்டவிதிகளுக்குக் கீழ் கைது செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

-இப்படி மக்கள் விடுதலை முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-எ]

### புதிய....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

களின் ஜனதிபதி அதாவது சிங்கள, தமிழ், முஸ்லிம், பேர்கர் மக்களதும் ஜனதிபதி.

நாங்கள் எல்லோரும் இனிமேல் ஒன்றுபட வேண்டும். நாங்கள் அனைவரும் எல்லோரையும் மனிதர்களாக மதிக்க வேண்டும். இந்த மாதிரித்தான் நான் சேவை செய்வேன், நன்றி.

[இதன் பின்னர் அவரது பேச்சு தமிழில் வாசிக்கப்பட்டது.] (ஓ)

## இராமகிருஷ்ணன் விஜயராகவன்

(உரிமையாளர்: R. V. புத்தகநிலையம் கோப்பாய்)

காலஞ்சென்ற இராமகிருஷ்ணனின் மகன் விஜயராகவன் காலமானார். இவர் நிர்மலா தேவியின் அன்புக் கணவரும், வலியமூர்த்தி, கருணாமூர்த்தி, விஜயலட்சுமி, காலஞ்சென்ற சீதாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலசந்திரன் (மன்னார் பாரி) சுகந்திரராஜன் (இத்தாலி) ஆகியோரின் சகலனும் மனோரஞ்சிதம் (இத்தாலி) கோவிந்தராஜன் (இத்தாலி) நிர்மலராஜன் (டென்மார்க்) மோகனராஜன் (ஜேர்மனி) அமிர்தராஜன் (இத்தாலி) குலராஜன் (இத்தாலி) நவரட்ணராஜன் (சவூதி) உஷாதேவி ஆகியோரின் மைத்துனரும் வேணுகோபால் பரமேஸ்வரி, பானுமதி ஆகியோரின் மைத்துனரும், ரகுவரன் வாசுகி ஆகியோரின் பெரியதகப்பனும் காலஞ்சென்ற குப்புசாமி நேசமலர் ஆகியோரின் மருமகனும் கோசலா, கிருஷ்ணகுமார் கிருஷ்ணவேணி, கிருஷ்ணரமணி ஆகியோரின் பெரியமாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று கோப்பாய் மயானத்திற்கு செவ்வாய்க்கிழமை 3-1-89 பி. ப. 2 மணியளவில் பூதவுடல் எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

சகோதரரும், மைத்துனரும்

கோப்பாய் தெற்கு
கோப்பாய் (8571)

## வயிரமுத்து தங்கராஜா

(சுன்னாகம் M. P. C. S. சாரதி)

சுன்னாகம் தெற்கைச்சேர்ந்த வயிரமுத்து தங்கராஜா (சுன்னாகம் M. P. C. S சாரதி) 31-12 88இல் அகால மரணமடைந்தார். இவர் சண்முகம், வயிரமுத்து, வயிரமுத்து அன்னம் ஆகியோரின் அன்புப் புதல்வரும், இ. தவநாயகி, கலாநாயகி, உ. ஜீவநாயகி, சர்வநாயகி, சர்வலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மு. இரத்தினம், சி. உதயகுமார் ஆகியோரின் அன்புமைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக 3-1-89 செவ்வாய் மாலை 2 மணிக்கு பூவோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர், நண்பர்கள் சக தொழிலாளர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

-குடும்பத்தினர்-

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம் - தெற்கு.
சுன்னாகம். (8744)

# மரண அறிவித்தல்கள்

## தம்பிப்பிள்ளை பாலசிங்கம்

கரம்பொனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் முன்னாள் பிரபல வர்த்தகரும் ஊர்காவற்றுறை ஜெரூட் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமாகிய தம்பிப்பிள்ளை பாலசிங்கம் 31-12-88 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை முத்தம்மா தம்பதிகளின் ஏக புதல்வனும் காலஞ்சென்ற திருமதி பேளி அக்னஸ் இன் அன்புக் கணவரும் ஜெரூட் (ஆசிரியர் சம் பத்திரிசியார் கல்லூரி; உரிமையாளர் செல்லம்ஸ். பேளி ஜுவல்லர்ஸ், யாழ்ப்பாணம்) என்பவரின் அன்புத் தந்தையும் மறிற்றூ ஜெரூட்டின் அன்பு மாமனரும் நாரந்தனை பே. வ. சூசைப்பிள்ளை, பெலிஸ்ரஸ், B L. பங்கராசா (உரிமையாளர் ராஜா ஸ்டோர்ஸ் ஊர்காவற்றுறை) இமல்டா ஆகியோரின அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற S. E. ஐயாத்துரையினதும் திருமதி றோசம்மாவினதும் சம்பந்தியும் ஜோசப் யூட் அன்ரனிற்றா மரி டெக்ஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் கரம்பொன் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக அன்னாரின் இல்லத்திலிருந்து 4-1-89 (புதன்கிழமை) காலை 9.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றூர் உறவினர் நண்பர்கள் ஏற்றுகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

கரம்பொன்
ஊர்காவற்றுறை 8564)

## திருமதி அன்னம்மா மிக்கேல்பிள்ளை

திருமதி அன்னம்மா மிக்கேல்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வர்த்தகர் சூ. மிக்கேல்பிள்ளையின் அன்பு மனைவியும், டென்னிஸ் அந்தோனிப்பிள்ளை (முருங்கன்), திருமதி றெபேக்கா கந்தையா, காலஞ்சென்ற அல்பிரட், காலஞ்சென்ற ஆரோக்கியநாதர், திருமதி றீற்றா மரியாம்பிள்ளை (செல்லமணி) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி செபஸ்தியம்மா, கந்தையா, திருமதி றோஸ்மலர் (அரசினர் வைத்தியசாலை, முருங்கன்), மரியாம்பிள்ளை (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு (3-1-89) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணியளவில் 16/16, விதானையார் வீதி, சுண்டிக்குளி இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: இரா. வேதநாயகம்

15, ஈச்சமோட்டை றேட்,
யாழ்ப்பாணம், C 8568

## வேலுப்பிள்ளை தம்பிஅப்பா

வடமராட்சி கெருடாவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முன்னாள் தம்பன் கடவை புகையிலை உற்பத்தியாளரும், காலஞ்சென்ற சிவயோகரத்தினஅம்மாவின் அன்புக் கணவரும், அமரர் தவப்புத்திரன். திரு. விவேகானந்தன், திருமதி ந. யோகேஸ்வரி, திரு. த. அமிர்தானந்தர் திருமதி க. பேரானந்தமலர், திரு. த. சச்சிதானந்தன், திரு. த. பாலதயானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமான வேலுப்பிள்ளை தம்பிஅப்பா 2-1-1989 இல் காலமானர்.

அன்னரது ஈமக்கிரியைகள் சம்பியன் லேன் 91 1/1 இல்லத்தில் 3-1-1989 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவல் உற்றூர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:

திரு. த. பாலதயானந்தன்
சம்பியன்லேன், (மகன்)
கொக்குவில். (8742)

## திருமதி வல்லிபுரம் செல்லம்மா

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்டர் முருகேசு வல்லிபுரத்தின் மனைவி திருமதி வல்லிபுரம் செல்லம்மா 1-1-1989 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;

K.S ரூபன்,
(க.சிவகந்தரூபன்)

'மோகன் பவன்'
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (8572)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 03-01-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது; Printed and Pablished by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalr Road, Jaffna on Tuesday 03rd January 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org